பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 ஆடி 4 வெள்ளிக்கிழமை (20.07.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 233

# யுத்த நிறுத்த ஒப்பந்தம் அநியாயமானது

# வெற்றி நிகழ்வில் ஜனாதிபதி பிரகடனம்!

## புலிகளுக்கு அதிகாரப் பிரதேசம் உண்டு என்பதை மாயை ஆக்கிவிட்டோம்



கொழும்பு, ஜூலை 20

நேற்று 'கிழக்கு உதயம்' நிகழ்வில் பங்குபற்றி நாட்டு மக்களுக்கு உரைநிகழ்த்திய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, விடுதலைப் புலிகளோடு முன்னைய அரசு செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையை அநியாயமான செயல் என்று வர்ணித்தார்.

புலிகளுக்கு அதிகாரப் பிரதேசம் உண்டு என்ற கருத்து வெறும் மாயை என்பதை தொப்பிகல நடவடிக்கை வெற்றி மூலம் படையினர் நிரூபித்து, உலகுக்கு எடுத்துக்காட்டி உணர்த்தியிருக் கின்றார்கள் என்றும் அவர் அறிவித்தார்.

தொப்பிகல காட்டுப் பிரதேசத்தைக் கைப்பற்றி, கிழக்கு மாகாணத்தைப் புலிகளின் பிடியிலிருந்து படையினர் முற்றாக விடுவித்துள்ளனர் எனப் பிரகடனப்படுத்திய அரசு, அதையொட்டிய வெற்றி நிகழ்வை 'கிழக்கு உதயம்' என்ற பெயரில் நேற்று கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடத்தியது.

இந்த நிகழ்வில் முப்படைகளினதும், பொலிஸாரினதும், சிரேஷ்ட தளகர்த்தரும், அரசின்தலைவரும், ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

கிழக்கு மீட்கப்பட்டமை பற்றிய வெற்றிப் பட்டயங்களின் பிரதிகளை முப்படைகளின் தளபதிகளும் பொலிஸ்மா அதிபரும் தனித்தனியாக அங்கு வைத்து ஜனாதிபதியிடம் கையளித்தனர்.

சுதந்திர தின விழா போன்று இந்நிகழ்வு இடம்பெற்றது. பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு ஜனாதிபதிக்கு கௌரவம் அளிக்கப்பட்டது. முப்படையினரின் அணி வகுப்பு மரியாதையை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## மேற்குலகத் தூதர்கள் வரவில்லை

கொழும்பு, ஜூலை 20

நேற்று கொழும்பில் நடந்த 'கிழக்கு உதயம்' நிகழ்வில் மேற்குலக நாடுகளின் தூதர்கள் பங்குபெறவில்லை. மேற்குலக மற்றும் ஜப்பான் போன்ற நாடுகளின் தூதரகங்களின் பாதுகாப்பு இணைப்பாளர்களே இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

எனினும் ஈரான், சவூதி அரேபியா, எகிப்து போன்ற மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் (08 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் பாதுகாப்புத் தீவிரம்

கொழும்பு, ஜூலை 20

'கிழக்கு உதயம்' வெற்றிவிழாவை ஒட்டி நேற்று கொழும்பு நகர் முழுவதும் கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

நகர வீதியெங்கும் முழத்துக்கு முழம் படையினர் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். அவர்கள் வீதியால் செல்வோர், வருவோரை (08 ஆம் பக்கம் பார்க்க)

## புளியங்குளத்தில் புலிகளின் சோதனை நிலையம் எரிந்தது

கொழும்பு, ஜூலை 20

வவுனியா, புளியங்குளத்திலுள்ள புலிகளின் சோதனை நிலையம் மீது, அரச படைகள் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் அந்த சோதனை நிலையத்தின் ஒரு பகுதி எரிந்து சேதமாகியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

புதன்கிழமை இரவு 11.30 (08 ஆம் பக்கம் பார்க்க)

# அதி நவீன ஆயுதங்கள், நிதிவளம் கொண்ட முன்னணிப் போராட்ட இயக்கமாகப் புலிகள்

### பிரபல பாதுகாப்பு சஞ்சிகை தகவல்

லண்டன், ஜூலை 20

அதிநவீன ஆயுதங்களுடன் அனைத்துலக நிதி மற்றும் ஆயுக் கொள்வனவு வலைப் பின்னலுடன் செயற்படும் போராட்ட அமைப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உலகில் இனங்காணப்பட்டுள்ளது.

பிரிட்டனில் இருந்து வெளிவரும் பிரபல பாதுகாப்புச்சஞ்சிகை "ஜேம்ஸ் வீக்லி" மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளது.

அச் சஞ்சிகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக் குறித்துத் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது:-

விடுதலைப் புலிகளின் நிதி மற்றும் ஆயுதக் கொள்வனவு கட்டமைப்பு உலகம் முழுமைக்கும் நேர்த்தியாக கட்டமைக்கப் பட்டதாக உள்ளது. ஆண்டுக்கு 200 மில்லியன் அமெரிக்க டொலர் முதல் 300 மில்லியன் டொலர் வரை ஆயுதக் கொள்வனவுக்கு புலிகள் செலவிடுகின்றனர்.

(08 ஆம் பக்கம் பார்க்க)

## பதுளையில் 11 பேர் கைது

கொழும்பு, ஜூலை 20

பதுளைப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது 11 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப் பட்டனர்.

தங்களது ஆள்அடையாளங்களை சரியான முறையில் நிரூபிக்கத் தவறியவர்களே கைதுசெய்யப்பட்டார்கள் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதானோர் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர். (சி)

## கல்வியங்காட்டில் ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு, ஜூலை 20

கல்வியங்காடுப் பகுதியில் நேற்று பிற்பகல் நடத்திய தேடுதலில் ஒரு தொகுதி ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்கள் மீட்கப்பட்டதாக ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது.

வவுனியா, வெலிஓயா ஆகிய இடங்களில் நேற்று நடத்திய தேடுதலின் போதும் ஆயுதங்கள் மீட்கப்பட்டதாக மேலும் அந் நிலையம் தெரிவித்துள்ளது. (அ-1)

# பாடசாலைகள் அமைந்த பிரதேசங்களை பாதுகாப்பு வலயங்களாக்க வேண்டும்

## யுனிசெவ் தலைவரிடம் புலிகள் வலியுறுத்து

கிளிநொச்சி, ஜூலை 20

விமானப்படையினரின் தாக்குதல்களில் இருந்து பாடசாலைகளையும் மாணவர்களையும் பாதுகாக்கும் வகையில் பாடசாலைகளைப் பாதுகாப்பு வலயங்களாக் பிரகடனப்படுத்த வேண்டும்.

கிளிநொச்சிக்கு நேற்று வருகைதந்த யுனிசெவ் அமைப்பின் தலைவர் ஜோ அன்னவன் கெர்பனிடம் மேற்கண்ட கோரிக்கை விடுக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சபையின் பிரதிநிதிகளுடன் யுனிசெவ் தலைவர் பேச்சு நடத்தினார்.

இச்சந்திப்பு குறித்து சமாதானச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இச்சந்திப்பின் போது இந்த ஆண்டின் இறுதிக்குள் 18 வயதுக்கு குறைந்தோரை தமது அமைப்பில் உறுப்பினர்களாக சேர்ப்பதனை முடிவுக்குக் கொண்டுவர உள்ளதாக சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

வடபகுதியில் வயது குறைந்த 135 சிறார்களை விடுதலைப் புலிகள் சேர்த்துள்ளனர் என்ற யுனிசெவ்வின் புள்ளிவிவரம் குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் சிறார் பாதுகாப்புச் சபையினரால் விளக்கம் அளிக்கப்பட்டது. அத்தகைய நிகழ்வுகள் ஏதும் நடைபெறவில்லை என்றும் சுட்

(08 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.க. - மங்கள அணி நேற்று ஒப்பந்தம்

கொழும்பு, ஜூலை 20

கிழக்கு மாகாண இராணுவ வெற்றியை அரசு தேசிய வெற்றி விழாவாகக் கொண்டாடிக் கொண்டிருக்கும் அதே சுபவேளையில், மஹிந்த ராஜபக்ஷவின் அரசைக் கவிழ்க்கும் நோக்கில் கூட்டு ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டது.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மக்கள் அணியின் தலைவர் மங்கள சமரவீரவும் இந்த கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

நேற்று பகல் 11.00 மணிக்கு நாடாளுமன்றத்தில் இந்த வைபவம் இடம்பெற்றது. நாடாளுமன்றக்குழு அறையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஐ.தே.க. பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, முன்னாள் அமைச்சர் சீறிபதி சூரியாராய்ச்சி மற்றும் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பின் ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றும்போது கூறியவையாவது:-

பெரும் நம்பிக்கையுடனும் எதிர்பார்ப்புகளுடனும் மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதியாக்கிய நாட்டுமக்களை, ராஜபக்ஷ சகோதரக் கம்பனியினர் பெரும் சித்திரவதைக்கு உள்ளாக்கி நாட்டையும் படுபாதாளத்தில் தள்ளிவிட்டனர்.

இன்று விஷம்போல் அதிகரித்துள்ள வாழ்க்கைச் செலவும், உணவுப் பொருள்களின் விலையேற்றமும் நாட்டில் பட்டினி, பஞ்சத்தை அதிகரித்துள்ளன. இவர்களுடைய ஆட்சி தொடர்ந்தால் இலங்கை ஒரு கம்போடியாவாக மாறிவிடும்.

இந்த அரசிடம் வறுமையை ஒழிக்க எந்த ஒரு சிறப்பான திட்டமும் இல்லை.

(08 ஆம் பக்கம் பார்க்க)

# பதுங்கு குழிகள் அமைப்பதற்கு சிங்கள மக்களுக்கு அரசு நிதி உதவி

கொழும்பு, ஜூலை 20

வெலிஓயாவின் எல்லைக் கிராம மக்கள் பாதுகாப்புக்காக பதுங்கு குழிகளை அமைப்பதற்கு அரசாங்கம் நிதி உதவி வழங்கவுள்ளது.

வெலி ஓயா பாதுகாப்புத் திட்டத்தில் எத்தவெற்றுணவெல எல்லைக் கிராம மக்கள் தமது வீடுகளுக்கு அருகே பதுங்கு குழிகளை அமைப்பதற்கு தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சு நிதி உதவியை வழங்க இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பதுங்கு குழிக்கு அடித்தளம் இட 10

(08 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வருட இறுதியில் கிழக்கில் மாகாணசபை, உள்ளூராட்சித் தேர்தல்கள்; சர்வகட்சி மாநாட்டில் தாமதம் வேண்டாம்; ஒற்றுமையுடன் வாழ்வோம்

## - ஜனாதிபதி மஹிந்தா

*("கிழக்கு உதயம்" வெற்றி நிகழ்வில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆற்றிய உரை இது)*

நண்பர்களே!

இந்த மகத்துவமிக்க தினத்தில் உங்கள் மத்தியில் உரையாற்றக்கிடைத்த அரச தலைவனாக இருப்பதையிட்டு அளவிலா பெருமிதமடைகிறேன். முழுநாட்டுக்கும் பெருமையைப் பெற்றுக்கொடுத்த இலங்கைத் தேசத்தின் மதிப்புமிக்க படைவீரர்களுக்கு எனது நன்றியையும் தெரிவித்துக் கொள்வதோடு, நான் இந்தக் கௌரவத்தை பணிவுடன் ஏற்றுக்கொள்கின்றேன்.

எதிர்காலத்தில் இலங்கை வரலாறு எழுதப்படும் சந்தர்ப்பத்தில், முப்படைத் தளபதிகளினால் அரசின் பொறுப்புதாரரான என்னிடம் ஒப்படைக் கப்படுகின்ற இந்தச் செய்தியினால் குறிப்பிடப்படும் அத்தியாயம் பொன் எழுத்துக்களால் பொறிக் கப்படும் என்பதில் சந்தேகமில்லை. பல தசாப்தங்களாக எமது தாய் நாட்டின் வளம்மிகுந்த கிழக் குப் பகுதியையும் அங்கு வாழ்ந்த சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் சுதந்திரத்தையும் பறித்துக் கொண்டிருந்த கொடூரபயங்கரவாதத்தை முற்றாக விரட்டி விட்டோம் என்று கூறுவதைப் போன்ற ஆறுதலானதும் கௌரவமானதுமான செய்தியை நாம் கடந்த காலத்தில் காணவில்லை.

கொடிய பயங்கரவாதத்தின் பணயக்கைதி களாக இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக கிழக்கு மாகாணத்தில் வாழ்ந்த மக்களின் விடுதலைக்காக இலங்கை பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட துணிச்சலான, தைரியமான நடவடிக்கைகளின் பெறுமதி இந்த புனித பூமியில் என்றுமே பாதுகாக்கப் படும். எமது பிள்ளைகளும், பேரப்பிள்ளைகளும் அதனை பல நூற்றாண்டுகள் நினைவு கூர்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

பயங்கரவாதத்திற்கு எதிராகப் போராடும் - உலகெங்கிலுமுள்ள - இராணுவத்தினருக்கு முன் மாதிரியாகவிருந்து பொது மக்களுக்கு ஆகக் குறைந்த சிரமத்தையும், பாதுகாப்புப் படையினருக்கு குறைவான சேதத்தையும் ஏற் படுத்தி இந்த நடவடிக்கை முடிவுக்கு வந்தது.

இந்த வெற்றி, பெரும்பான்மை இனம் சிறுபான்மை இனத்தை மிதித்து விட்டது எனக்கூறும் சில விமர்சனங்களைக் கண்டேன். 'பெரும்பான்மை இனம்', 'சிறுபான்மை இனம்' - இந்தச் சொற்பிரயோகங்களைக்கூட நான் விரும்பவில்லை. நாம் அனைவரும் இலங்கையர்கள். கிழக்கின் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்தே தொப்பிகலவில் தேசியக் கொடியை ஏற்றுவதற்கு வழிவகுத்தார்கள்.

அவ்வாறு எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தினருக்கு ஏற்படுத்திய தோல்வியை வெறுமனே இராணுவ வெற்றியொன்றாக மாத்திரம் குறிப்பிடுவதற்கு நான் விரும்பவில்லை. அதற்கும் அப்பால் தேசிய, சர்வதேச பெறுமானமொன்று இந்த வெற்றியினுள் பொதிந்திருக்கிறது.

### யுத்தநிறுத்த உடன்படிக்கை அநியாயமான நடவடிக்கை

நண்பர்களே! பயங்கரவாதத்திற்கு சட்டரீதியான அதிகாரப் பிரதேசமொன்று இருக்கின்றதென்பதை உடன்படிக்கையொன்றின் மூலம் ஏற்றுக் கொண்டது போன்ற அநியாயமான செயலொன்று இலங்கையிலன்றி உலகில் வேறெங்குமே நடக்க வில்லை.

இந்தப் பிரதேச அதிகார மாயையை அம்பலப்படுத்தியதன் மூலம் பயங்கரவாதத்தின் ஈழக்கனவு சுக்குநூறாகச் செல்லும் செய்தியையே தொப்பிகல மலை உச்சியில் இருந்துகொண்டு எமது வீரம் மிக்க படைவீரர்கள் உலகுக்கு எடுத்துக் கூறினார்கள்.

அது மட்டுமா? நாட்டின் ஏனைய பிரதேசங்களுடன் ஒப்பிடுகையில், கிழக்குப் பகுதி முன்னேற்றமடையாத பிரதேசமொன்றாகவே கருதப்பட்டது. வன்முறையில் சிக்குண்டதனால் வளமிக்க கிழக்கின் தைரியமிக்க மக்கள் பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் ஊனமுற்றார்கள். அரசியல் ரீதியாகவும் கலாசார ரீதியாகவும் அவர்கள் அங்கவீனமடைந்தனர். முக்காடு அணிந்த பிள்ளைகளினதும், நெற்றியில் பொட்டு வைத்த தமிழ்ப் பிள்ளைகளினதும், ஏனைய சிங்களப் பிள்ளைகளினதும் கல்வி கற்கும் உரிமையை அவர்கள் பறித்துக்கொண்டனர்.

### சர்வதேச சமூகத்திற்கு விடுக்கும் கோரிக்கை

நண்பர்களே!

உங்கள் 12 வயது, 14 வயது பிள்ளைகள் ஆயுதங்களை உபயோகிப்பதை உங்களால் நினைத்துக்கூடப் பார்க்க முடியுமா? உண்மையிலேயே முடியாது. என்றாலும் கிழக்கிலும் வடக்கிலும் இது தான் யதார்த்தம். புத்தகங்களுக்கும் கலர் பென் சில் பெட்டிகளுக்கும் பதிலாக அவர்களுக்குக் கிடைத் தது எல்.ரி.ரி.ஈயின் துப்பாக்கிகளும், குண்டுகளும், சயனைட் வில்லைகளுமேயாகும். இப்போது நாம் அனைவரும் ஒன்றிணைந்து அந்தப் பிள்ளைகளின் எதிர்கால உலகைக் கட்டியெழுப்புவோம்.

இதற்கு குறிப்பாக எமது சர்வதேச நண்பர்கள் எமக்கு உதவுவார்கள் என நான் முழுமையாக நம்புகிறேன்.

அதேபோல், பொய்யான சுலோகங்களை ஏந்திக்கொண்டு கிழக்கின் இந்த உதயத்தைத் தடுக்க வேண்டாமென சர்வதேச சமூகத்திடமும் எமது சில அரசியல்வாதிகளிடமும் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். உலகம் முழுவதும் சுற்றித்திரிந்து தாய் நாட்டைக் காட்டிக்கொடுக்க வேண்டாமெனவும் கேட்டுக்கொள்கிறேன்.

எம்மிடம் குறைபாடுகள் இருந்தால் நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து அவற்றை விமர்சனம் செய்துகொள்வோம். மஹிந்த ராஜபக்ஷவை பரிகாசம் செய்தால் பரவாயில்லை. ஆனால் இந்த உன்னதமான நாட்டைக் காட்டிக்கொடுக்க வேண்டாம்.

### பயங்கரவாத செயற்பாடு வேறு மனித உரிமைகள் வேறு

மனித உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியது எமது அடிப்படையான பொறுப்பாகும். நான் எனது காலம்முழுவதும் அதற்காக உறுதியாகச் செயலாற்றினேன் என்பது உங்களுக்கு இரகசியமான விடயமல்ல. எனினும் பயங்கரவாதிகளின் செயற்பாடுகளுக்கும், மனித உரிமைகளுக்குமிடையிலான வேறுபாட்டை தெளிவாகவே புரிந்து கொள்ளவேண்டும். இதைக் குழப்பிக்கொள்ளவேண்டாம்.

அதேபோல், பாதுகாப்புப் படையினரைத் தூற்றுவதன் மூலமோ அல்லது அவர்கள் மீது பாரதூரமான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதன் மூலமோ இந்த வெற்றியை மூடிமறைக்கும் முயற்சியொன்றை நாம் காண்கிறோம். மகாசங்கத் தினருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதன் மூலம் தமது சுயரூபத்தை மறைப்பதற்கான முயற்சிகளையும் நாம் காண் கிறோம்.

தொப்பிகல ஒரு வனாந்தரமா? சரணாலயமா? அங்கு எத்தனை வாவிகள் இருந்தன? அங்கு எத்தனை வீடுகள் இருந்தன? ஒரு ஏக்கரில் எத் தனை மரங்கள் இருந்தன? போன்ற கேள்விகள் வரைபடக் கலைஞர்களுக்கு மாத்திரமே முக்கியமாகின்றன. தயவு செய்து பொறாமையோடு இதைப் பார்க்க வேண்டாம். இது அரசின் அல்லது எனது தனிப்பட்ட வெற்றியல்ல. இது பாதுகாப்புச் செயலாளரினதோ முப்படைத் தளபதிகளினதோ தனிப்பட்ட வெற்றியுமல்ல. சிலர் அவ்வாறு நினைத்தே பித்துப்பிடித்ததுபோல் உளறுகின்றார்கள்.

### என்னைத் தூற்றுங்கள்! இராணுவத்தைத் தூற்றாதீர்கள்!!

நண்பர்களே!

இது மக்களின் வெற்றியாகும். அந்நியராக இல்லாமல் வெற்றியின் ஒரு பங்களாராகும்படி எதிர்க்கட்சித் தலைவரையும் நான் கௌரவத்துடன் அழைக்கின்றேன். என்னைத் தூற்றினாலும் எனது குடும்ப அங்கத்தவர்களைத் தூற்றினாலும் பரவாயில்லை. அதை நாம் பொறுத்துக்கொள்கின்றோம். ஆனாலும், எமது இராணுவத்தினரைத் தூற்றிப் பரிகசிக்க வேண்டாம். இராணுவத்தினரைக் குறைத்து மதிப்பிடவும் வேண்டாம். அவர்கள் தமது உடல், உயிர், இரத்தம் என்பவற்றைத் தியாகம் செய்தே தாய் நாட்டுக்கு இந்த வெற்றியைப் பெற்றுக் கொடுத்தார்கள்.

நாம் அரசியலில் இருந்து விடைபெறும் நாளில் உனது பிள்ளைகளுக்கு எதைக் கொடுத்தாய் என்று மனச்சாட்சி எம்மிடம் கேட்கும். காலனித்துவ நாட்டையா? பிளவுபட்ட நாட்டையா?

இல்லை, நண்பர்களே! நாம் எமது பிள்ளைகளுக்கு கௌரவத்துடன் வாழக் கூடிய நாடொன்றைப் பரிசளிப்போம்.

சிங்கள, தமிழ், முஸ்லிம் பிள்ளைகள் ஒரு தாய் பெற்ற பிள்ளைகள் போல் மகிழ்ந்து வாழக்கூடிய ஒரு நாட்டை நாம் அவர்களுக்கு அன்பளிப்புச் செய்வோம்.

### சர்வகட்சி மாநாட்டில் மேலும் தாமதம் வேண்டாம்

சர்வகட்சி மாநாட்டினூடாக இந்நாட்டிலுள்ள பல்வேறு அரசியல் கட்சிகளின் கருத்துகளை ஒருங்கிணைத்து வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வொன்றை வழங்குவதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது. இதனை மேலும் தாமதமடையச் செய்ய வேண்டாம். எல்லா அரசியல் கட்சிகளும் தமது ஆலோசனைகளைத் துரிதமாக முன்வைக் கும்படி பகிரங்கமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். ஒன்றுபட்டு இறுதித் தீர்வுக்கு வாருங்கள்.

தமிழ் பேசும் மக்களை கூடுதலாக அரசியல் அதிகாரத்தில் இணைத் துக் கொள்வதற்குத் தேவையான கட்டமைப்பொன்றை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். வடக்கு - கிழக்கு மக்களுக்கு நியாயமான பிரச்சினைகள் இருக்குமாயின் நாம் அதற்காக கூருணர்ச்சியுடன் செயற்படுவோம். தமிழராக அல்லது முஸ்லிமாக இருக்கின்ற காரணத்தினால் எவரும் கஷ்டத்திற்கு ஆளாகக் கூடாது.

### தமிழ் மக்களின் விடுதலை குண்டுகளால் சரிவராது

அதேபோல், துப்பாக்கிகளின் மூலமோ, குண்டுகளின் மூலமோ, சயனைட் வில்லைகளின் மூலமோ தமிழ் மக்களின் விடுதலையை ஏற்படுத்திக் கொள்ள இயலாது என்ற யதார்த்தத்தை எல்.ரி.ரி.ஈ. இயக்கம் இப்போதாவது புரிந்து கொள்ளவேண்டும். தமிழ்ப் பிள்ளைகளின் எதிர்காலத்தைத் தான் அவர்கள் பாழ்படுத்துகின்றார்கள்; எமது நாட்டுப் பிள்ளைகள் அனைவரினதும் எதிர்காலத்தையும்தான். அவர்கள் தமது கலாசாரத்தைத்தான் அழிக்கின்றார்கள்.

எவ்வளவுதான் பயங்கரமானாலும் எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தின் வன்முறைக் குரலுக்கு நான் அடிபணிய அல்லது பயப்படப்போவதில்லை. அவர்களுடைய கொலை அச்சுறுத்தல்களுக்கு நான் அசையப்போவதில்லை. நாட்டுக்கான எனது கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்ற நான் உளப்பூர்வமாக கட்டுப்பட்டுள்ளேன்.

கிழக்கு மாகாண மக்களுக்கு தமது அடிப்படை உரிமையான வாக்கைப் பயன்படுத்தும் உரிமை கிடைக்கப்பெற்றிருந்ததா? 15 வருடங்களாக இந்த அப்பாவி மக்களின் பிரஜா உரிமை பறிக்கப்பட்டிருந்தது. பறிக்கப்பட்ட இந்த உரிமையை நாம் மீண்டும் பெற்றுக்கொடுப்போம். இந்த வருட இறுதியில் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாணசபைத் தேர்தல்கள் நடத்தப்படும். இவ்வருட இறுதியில் தமது பிரதிநிதிகளை உள்ளூராட்சி மன்றங்களுக்கும் மாகாண சபைக்கும் தேர்ந்தெடுக்கும் உன்னத உரிமை கிழக்கு மாகாண மக்களுக்குக் கிடைக்கும். கடந்த காலம் முழுவதும் தேர்தல் ஊழல்களில் ஈடுபட்டவர்கள் இதற்கும் கனவில் பயந்ததைப் போல் சத்தமிடுவார்கள்.

வாக்குரிமை மட்டுமல்லாமல் மின்சாரம், நெடுஞ்சாலைகள், போக்குவரத்து, பாடசாலைகள், வைத்தியசாலைகள், புதிய கைத்தொழில்கள்-போன்ற அனைத்தும் கிழக்கு மாகாணத்தைச் சுபீட்சமாக்கும் நாள் வெகுதூரத்தில் இல்லை.

### நில சுதந்திரம் போன்று பொருளாதார சுதந்திரமும் முக்கியமானது

நிலத்தின் சுதந்திரத்தைப் போல பொருளாதாரச் சுதந்திரமும் முக்கியமானதாகும். இதற்காக விவசாயக் கைத்தொழிலை அடிப்படையாகக் கொண்ட துரித அபிவிருத்தி வேலைத் திட்டமொன்றை நாடு முழுவதும் முன்னெடுப்பதற்கு நாம் எதிர்பார்க்கின்றோம். இந்தத் துரித அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் மூலமாக இந்த நாடு இழந்த பொருளாதார சுபீட்சத்தை மீண்டும் கொண்டுவருவதற்கு நான் எதிர்பார்க்கின்றேன்.

நண்பர்களே!

ஜனரஞ்சகமான அரசியல்வாதியாக வரலாற்றில் இணைந்துகொள்ள நாம் விரும்பவில்லை. இந்த நாட்டையும், நாட்டின் எல்லா உயிர்களையும், நாட்டின் எல்லாப் பசுமைகளையும் நேசித்த பாதுகாவலனாக வரலாற்றில் இடம்பெற்றால் அதுவே எனக்கு போதுமானதாகும். தேர்தலுக்காக அல்லாமல் நாட்டுக்காக அரசியலில் ஈடுபட்ட இலங்கையர் ஒருவராக வரலாற்றில் நான் அறிமுகப்படுத்தப்பட்டால் அதுவே நான் பெறுகின்ற உயர்ந்த கௌரவமும் திருப்தியுமாகும்.

### தாய் நாட்டை நேசிக்கின்ற மக்களின் உறுதிப்பாட்டின் அடையாளம்

இறுதியாக நண்பர்களே!

தாய்நாட்டை உண்மையாகவே நேசிக்கின்ற மக்களுடைய உறுதிப்பாட்டின் ஓர் அடையாளமாக தொப்பிகல வெற்றியை நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

இந்நாட்டின் உழைக்கும் மக்கள் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியிலும் நிதானமாக இதற்கு வழங்கிய தைரியத்தை நான் உணர்வுமிக்க நேசத்துடன் மதிக்கின்றேன். வேலைநிறுத்தம் மற்றும் ஏனைய குழப்பங்கள் இன்றி இதை நாம் நிறைவேற்றினோம்.

### பொறுமையின் வெற்றி இது

சகோதரர்களே! இது உங்கள் பொறுமையின் வெற்றியாகும்.

இந்நாட்டின் பெரும்பாலான ஊடகங்கள் இந்தப் போராட்டத்தில் முன்னணியில் நின்று தமது பொறுப்பை நிறைவேற்றின. நண்பர்களே, இதற்கு அரசின் இதயபூர்வமான நன்றி உங்களுக்கு உரித்தாகட்டும்.

எந்தப் பிரச்சினைகள் இருந்தாலும் நம்நாட்டின் அப்பாவி மக்கள் பிளவுபடாத தேசத்தை, கௌரவமான சமாதானத்தைத்தான் வேண்டினார்கள். பிரஜைகளே! இது உங்கள் வெற்றியாகும்.

அதேபோல், அரசின் பாதுகாப்புக்காக நிபந்தனைகளின்றிச் செயற்படுகின்ற அனைத்து அரசியல் கட்சிகளும் இச்சந்தர்ப்பத்தில் இந்த வெற்றி யின் பங்காளிகள் ஆகின்றார்கள்.

தமிழ் பேசும் எனது அன்பார்ந்த நண்பர்களே! நியாயமான காரணங்களுக்காக இடம்பெறுகின்ற யுத்தத்தைவிட உங்களுக்கு சமாதானம் பெறுமதிமிக்கதென்பதை நான் அறிவேன். அது எம்மனைவருக்கும் பெறுமதியானது. நிறைந்த உணவுப் பாத்திரத்தைவிட சுதந்திரம் உங்களுக்குப் பெறு மதியானது என நான் உணர்கின்றேன். உங்களிடம் விட்டுச் செல்லப்பட்ட அந்தக் கண்ணீர் நிறைந்த வரலாற் றைப் பற்றி எனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதனாலேயே உங்களதும், உங்கள் பிள்ளைகளினதும் எதிர்காலப் பொறுப்பை நான் உணர்வுபூர்வமாக ஏற்றுக்கொண்டுள்ளேன்.

'கிழக்கின் உதயம்' கிழக்கிலங்கை மக்களின் அப்பாவி வாழ்க்கையை ஒளிமயமாக்கி அந்த ஒளியினூடாக சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் வரலாற்று ரீதியான சகோதரத்துவம் தளிர்விட்டு வளருமென நான் உறுதியாக நம்புகிறேன். எனவே, இந்த வெற்றியை அண்மைக்கால இலங்கைச் சரித்திரத்தை மாற்றியமைக்கின்ற ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்துங்கள். எல்லா இனங்களையும் மதங்களையும் சார்ந்த மக்கள் அனைவரும் ஒற்று மையுடனும் சகோதரத்துவத்துடனும் வாழ்வோம் என உறுதிபூணுமாறு உணர்வு பூர்வமாகவும் மிகப் பொறுப்புடனும் நான் வேண்டிக்கொள் கின்றோன் - என்று தெரிவித்தார். (சி)


# VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRILANKA

University of Jaffna will entertain applications from qualified persons for the under mentioned posts.

**FACULTY OF MEDICINE**

Senior professor/ professor in Anatomy/ Community Medicine/ Pathology/ Forensic Medicine/ Medicine/ Pharmacology/ Psychiatry/ Obstetrics & Gynaccology/ Paediatrics/ Surgery

Senior Lecturer grade I/ Senior Lecturer Grade II/ Lecturer (Probationaruy) in Anatomy/ Biochemistry/ Physiology/ Community Medicine/ Pathology/ Microbiology/ Parasitology/ Forensic Medicine/ Medicine/ Pharmacology/ Psychiatry/ Obstetrics & Gynaecology/ Paediatrics/ Surgery/ Nuclear Medicine/ Medical Education.

Endowment Chair in Oncology/ Orthopedic Surgery

Clinical Psychologist

**Para Medicine Degree Programme**

Senior Lectrer grade I / Senior Lecturer Grade II/ Lecturer (Probationary) in Nursing/ Pharmacy/ Medical Laboratory Technology.

Demonstrator (on contract) in Nursing / Pharmacy/ Medical Laboratory Technology

Note:

1. Applications are expected from candidates with **MBBS** Degree for the post in the Faculty of Medicine.
2. Applications from candidates with **BDS** and **BVSc** degree can also be considered for the Post on the **Biochemistry.**
3. Aplications from candidates with **BDS** and **BVSc** degree shall be con sidered for the post in **Anatomy, Physiology, Pathol ogy, Community Medicine and Pharmacology on contract basis.**
4. Aplications from candidates with degree in a **related field** shall be considered for the post in **Nuclear Medicine/Medical Education/ Nursing/ Pharmacy/ Medical Laboratory Technology**

**FACULTY OF MANAGEMENT STUDIES & COMMERCE**

1) Visiting Lecturer in Public Sector Accounting/Finance and Control

| Post | Salary Scale |
|---|---|
| Senior Professor | Rs.57,755-11x900-67,655/- p.m |
| Professor | Rs.50,905-13x850-61,955/- p.m |
| Senior Lecturer Gr.I | Rs.42,650-7x800-48,250/- p.m |
| Senior Lecturer Gr.II | Rs.37,650-11x700-45,350/- p.m |
| Lecturer (Probationary) | Rs.26,900-10x585-32,750/- p.m |
| Clinical Psychologist | Rs.26,900-10x585-32750/- p.m |
| Demonstrator | Rs.20,755/- (fixed) /- p.m |
| Visiting Lecturer | Rs.500/- per hour |

**Note:** In addition to the above salary, the following allowances will also be paid:
i. An acadademic allowance equivalent to 25% of the basic salary
ii. Cost of living allowance of Rs.1,750/- p.m.

**Statutory benefits:**

I. Sabbatical leave entitlment for the holder of the post of senior lecturer Gr.11 and above.
II. Membership in Universities Provident Fund and Pension Scheme in the University system.
III. Gratuity payments.
IV. Employees' Trust Fund benefits.
V. Free Medical Services.

**Closing Date :**

| | |
|---|---|
| **Post of Senior Professor/Professor** | **- 10.10.2007** |
| **Other permanent posts** | **- 07.09.2007** |
| **Contract/ Visiting posts** | **- 20.08.2007** |

Applications and other documents for the Post of Senior Professor / Professor shall be sent to the **Vice-Chancellor** with a covering letter. Applications for the other posts shall be sent to the Senior Assistant Registrar/ Establishments.

Application forms and other details may be obtained from the office of the Senior Assistant Registrar/ Establishments, University of Jaffna, SriLanka, either in person or by post, on a payment of Rs.100/- perform. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/ Postal Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self - addressed stamped envelope 23x10 c.m. in size.

Those who wish to apply for **more than** one post should apply in **separate forms.**

Applicants from the University System/ Government Departments/ Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Applications received after the closing date will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR,
UNIVERSITY OF JAFFNA,
SRILANKA,
18.07.2007**

(C/52981)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுன்னாகம் நலன்புரி நிலைய மக்கள் குடிதண்ணீரைப் பெறுவதில் சிரமம்

## மலசல கூடம், முன்பள்ளி வசதிகளும் இல்லை

யாழ்ப்பாணம்,ஜூலை20

சுன்னாகம், பெரிய மதவடி நலன்புரி நிலையத்தில் வசிக்கும் மக்கள் குடிதண்ணீர் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

சுன்னாகம், பெரிய மதவடி நலன்புரி நிலையத்தில் சுமார் 50 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்துவருகின்றன. இந்தக் குடும்பங்கள் தமது அன்றாட தேவைக்கான குடிதண்ணீரைப் பொது இடத்திலுள்ள குழாய்க்கிணறு ஒன்றின் மூலமே பெற்று வருகின்றனர். அது மட்டுமன்றி இதர தேவைகளுக்கும் அவர்கள் இந்தக் குழாய்க் கிணற்றையே நம்பியுள்ளனர். இதனால் அந்த நலன்புரி நிலையத்தில் உள்ள குடும்பங்கள் நீரைப் பெறுவதில் நெருக்கடியையும் சிரமங்களையும் எதிர்கொள்கின்றன.

அத்துடன் இந்த நலன்புரி நிலையத்தில் அமைக்கப்பட்ட பொது மலசல கூடங்களும் பழுதடைந்துள்ளன. இதனால் அந்த நிலையத்தில் உள்ளவர்கள் குறிப்பாகப் பெண்கள் இயற்கைக் கடன் கழிப்பதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றன.

இப்பகுதியில் முன்பள்ளி ஒன்றும் முன்னர் இயங்கியது. ஆயினும் இங்கு ஏற்பட்டுள்ள வசதியீனங்கள் மற்றும் நிர்வாகச் சீர்கேடுகள் காரணமாக அந்த முன்பள்ளியும் தற்போது மூடப்பட்டுள்ளது. இதனால் சிறுவர்கள் தூர இடங்களுக்குச் சென்றே கல்வி கற்ற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகப் பெற்றோர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே இந்த நலன்புரி நிலையத்தின் நிலைமையைக் கருத்திற் கொண்டு தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் உதவ வேண்டும் என நலன்புரி நிலைய மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (50-79)

# உயர்தொழில்நுட்ப நிறுவன விரிவுரைகள் 23ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை20

யாழ். உயர்தொழில்நுட்ப நிறுவனத்தின் இரண்டாம் அரையாண்டுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 23ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன என்று நிறுவன உதவிப் பதிவாளர் என்.உமாகாந்தன் தெரிவித்துள்ளார்.

வார இறுதிக் கற்கைகள் எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (50-203)

# புதுப்பொலிவு பெறுகிறது நல்லூர்க் கந்தன் ஆலயம்

யாழ்ப்பாணம், ஜூலை20

சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தசுவாமி ஆலயம் வருடாந்த உற்சவத்தையொட்டிப் புதுமெருகூட்டப்படுகிறது.

ஆலய உற்சவம் ஓகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. தொடர்ந்து 25 நாள்கள் விழா நடைபெறும்.

இதனையொட்டி ஆலயச் சுற்றாடலில் உள்ள வீதிகளில் மண் பரவப்படுகின்றது. அத்துடன் ஆலயத்தில் வர்ணப் பூச்சு வேலைகள் உட்படப் பல்வேறு புனரமைப்புப் பணிகள் தற்போது துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

திருவிழாக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆலய நிர்வாக சபையினர் மேற்கொண்டுள்ளனர். (50-79)

# வலிகாமம் வலயத்தில் சிந்துநடைக் கூத்துப் போட்டி

வலி.தென்மேற்கு,ஜூலை20

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான கூத்து, சிந்துநடைக் கூத்து ஆகிய போட்டிகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

தமிழ் மொழித் தினத்தை முன்னிட்டு நடைபெறவுள்ள இப் போட்டியில் இவ் வலயத்தைச் சேர்ந்த பல பாடசாலைகள் பங்குபற்றவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (203- 135)

# புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூலை20

தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 5இல் கற்கும் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பயிற்சிப் பரீட்சை நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு சகல பாடசாலைகளிலும் நடைபெறும்.

பரீட்சை வினாத்தாள்களை சனிக்கிழமை வலயக் கல்விப் பணிமனையில் பெற்றுப் பின்னர் அன்று மாலை விடைத்தாள்களை வலயக் கல்விப் பணிமனையில் சேர்ப்பிக்க வேண்டுமெனவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் விடைத்தாள் திருத்தும் பணிகள் நடைபெறும் எனவும் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

# இந்து தர்மாசிரியர் பரீட்சைக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,ஜூலை20

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் யாழ்.மாவட்ட இந்து தர்மாசிரியர்களுக்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் பங்குபற்ற விரும்புவோர் யாழ்.மாவட்ட செயலகத்திலுள்ள இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் 25 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (50-79)





யாழ்.பல்கலைகழகத்தில் 'நாடகமும் அரங்கியலும்' பாடநெறியைப் பயிலும் மாணவர்களின் ஏற்பாட்டில் 'அலங்கோலங்கள்' என்னும் வேடமுகங்கள் கண்காட்சி கடந்த 17ஆம் திகதி ஆரம்பமானது. பதில் துணைவேந்தர் பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல் நாடாவை வெட்டிக் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார். கண்காட்சி தொடர்பாகப் பல்கலைக்கழக மாணவி ஒருவர் பார்வையாளர்களுக்கு விளக்கமளிப்பதையும் மாணவர்கள் பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். *(படங்கள் : நேசன்)*

# பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவு தினமும்

யாழ்ப்பாணம்,ஜூலை20

ஆனைக்கோட்டை, உயரப்புலம் குணபாலன் வித்தியாசாலையில் நிறுவுநர் நினைவு தினமும் வருடாந்த பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளன.

வித்தியாலய அதிபர் நா.தனபாலசிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் கலந்து கொள்வார்.

யாழ்.கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை நிறுவுநர் நினைவு உரை நிகழ்த்துவார். (1)

# யாழ். உள்ளூராட்சிச் சபைகளில் இவ்வாண்டு புதிய வேலைத் திட்டம்

## உலக உணவுத்திட்டத்தின் உதவியுடன்

யாழ்ப்பாணம்,ஜூலை 20

உலக உணவுத்திட்ட நிறுவனத்தினால் இவ்வருடம் உள்ளூராட்சி சபைகளில் புதிய வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

குளம் ஆழமாக்கல், மலசலகூடம் அமைத்தல், மரம் நடுகை, பாதீனியம் அழித்தல், வாய்க்கால் அமைத்தல், வீதி புனரமைப்பு ஆகிய வேலைத்திட்டங்கள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக உலக உணவுத் திட்ட வேலைகள் தேசநிர்மாண மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் திட்டப் பணிப்பாளர் ஆர்.எச்.டபிள்யு.குமாரஸ்ரீ யாழ்.அரச அதிபருக்கு அறிவித்துள்ளார்.

ஊர்காவற்றுறை பிரதேச சபை, காரைநகர் பிரதேச சபை, பருத்தித்துறை நகரசபை, வலி.கிழக்குப் பிரதேசசபை, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, வலி.தென்மேற்கு பிரதேச சபை, சாவகச்சேரி பிரதேச சபை, சாவகச்சேரி நகரசபை, வலி.தெற்கு பிரதேச சபை ஆகியவற்றில் இவ்வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (50-207)




# தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை20

தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் பிரதேச விவசாயக் குழுக் கூட்டமும் எதிர்வரும் 24ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிரதேச செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

காலை 10 மணிக்கு விவசாயக் குழுக் கூட்டமும் 11 மணிக்கு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமும் நடைபெறுமென பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்.(50-207)

# சஞ்சீவன் நினைவையொட்டி யாழ். இந்துவில் குருதிக் கொடை

யாழ்.இந்துக் கல்லூரி 2000ஆம் ஆண்டு கணிதப் பிரிவு மாணவன் அமரர் சோமசுந்தரம் சஞ்சீவன் ஞாபகார்த்தமாகக் குருதிக் கொடை நிகழ்வு ஒன்று நேற்றுமுன்தினம் புதன்கிழமை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.

யாழ்.மாவட்டத் தமிழ் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் இந்தக் குருதிக் கொடை நிகழ்வு நடைபெற்றது.

குடாநாட்டுப் பாடசாலைகளைச் சேர்ந்த 150 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்த நிகழ்வில் கலந்துகொண்டு குருதியை வழங்கினார்கள்.

# பற் சுகாதாரம் தொடர்பாக விழிப்புணர்வுப் பிரசாரம்

யாழ்ப்பாணம்,ஜூலை20

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து முன்பள்ளிகளிலும் பற்சுகாதாரம் தொடர்பான விழிப்புணர்வுப் பிரசாரம் ஒன்றை மாகாண சுகாதார சேவைகள் பணிமனை மேற்கொண்டுள்ளது.

அதிகரித்து வரும் பற்சூத்தை நோயை அடுத்து சிறுவர்கள் மற்றும் பெற்றோர்கள் மத்தியில் பற்சுகாதாரம் தொடர்பான அறிவூட்டலை மேற்கொள்வதற்காகவே இந்தப் பிரசார நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அனைத்து முன்பள்ளிகளுக்கும் சுகாதாரப் பரிசோதகர்கள் விஜயம் செய்து அங்கு முன்பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோருக்கு பற்சுகாதாரம் தொடர்பான அறிவூட்டல்களை மேற்கொண்டுள்ளனர்.(அ-50)

# உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு தென்மராட்சியிலும், வடமராட்சியிலும் கருத்தரங்கு

## சனியும், ஞாயிறும் இடம்பெறும்

யாழ்ப்பாணம்,ஜூலை 20

தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தின் ஏற்பாட்டில் ஜி.சீ.ஈ.(உயர்தர) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகள் நாளையும் நாளைமறுதினமும் நடைபெறவிருக்கின்றன.

தென்மராட்சியிலும், வடமராட்சியிலும் இடம்பெறும் இக்கருத்தரங்கில் முன்னணி ஆசிரியர்கள் பங்குகொள்ளவிருக்கின்றனர்.

வடமராட்சியில் - நெல்லியடி ம.ம.வித்தியாலயத்தில் நாளை காலை 8 மணி முதல் 11 மணிவரை இரசாயனவியல் பாடமும் முற்பகல் 11.30 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை பௌதிகவியல் பாடமும் -

தென்மராட்சியில் - சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நாளை காலை 8 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை - உயிரியல்/இணைந்த கணிதம் ஆகிய பாடங்களும் - இடம்பெறும்.

நெல்லியடி ம.ம.வியில் - நாளை மறுதினம் காலை 8 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை உயிரியல்/ இணைந்த கணிதம் ஆகிய பாடங்களும்

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் - நாளை மறுதினம் காலை 8 மணிமுதல் 11 மணிவரை பௌதிகவியல் பாடமும் முற்பகல் 11.30 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை இரசாயனவியல் பாடமும் - இடம்பெறும். (1-207)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூலை20

கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணிஅம்பாள் ஆலய வருடாந்த லஷார்ச்சனை நேற்று ஆரம்பமானது.

எதிர்வரும் 29 ஆம் திகதி லஷார்ச்சனை பூர்த்தியை ஒட்டி சங்காபிஷேகம் சகஸ்ரநாம அர்ச்சனை ஆகியன இடம்பெறும்.

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை20

சங்கானை செங்கற்படை மகா தேவப் பிள்ளையார் தேவஸ்தான பெருந்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12.05 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 28ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் முற்பகல் 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (1)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை20

அளவெட்டி தெற்கு வெளிவயல் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான பெருந்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 28 ஆம் திகதி முற்பகல் 10.35 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (1)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை20

கொக்குவில் - கோணாவளை ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலய பெருந்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 8 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை 8.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறும். (1)

* * *

யாழ்ப்பாணம்,ஜூலை20

அனலைதீவு நயினாகுளம் ஹரிகர புத்திர ஐயனார் ஆலய பெருந் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 28 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறும். (1-207)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை20

அராலி கரைப்பிட்டி கணபதீஸ்வரர் தேவஸ்தான வருடாந்த பெருந்திருவிழா இன்று காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டு விழா

யா/ புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயத்திலிருந்து
இன்று (20.07.2007) வெள்ளிக்கிழமை ஓய்வுபெற்றுச் செல்லும் உப அதிபர் அவர்களைப்
**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



**திரு.சு.நடராசா**
(பொதுப்பயிற்சி, SLTS-I)
உப அதிபர், யா/ புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம்,
புத்தூர்.

## சேவை விவரம்:

- ப/ஹப்புத்தளை தமிழ் மகா வித்தியாலயம் ஆசிரியர் (01.09.1971 - 14.01.1974)
- பயிற்சி யா/கொழும்புத்துறை அரசினர் ஆசிரிய கலாசாலை (15.01.1974 - 31.12.1975)
- தி/ அலஸ்காடன் அ.த.க. பாடசாலை, சாம்பல் தீவு பயிற்சி ஆசிரியர் (01.01.1976-31.12.1981)
- யா/புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம்,புத்தூர் ஆசிரியராக (01.01.1982 - 1995 வரை) உப அதிபராக (1995-20.07.2007 வரை)
- 25 ஆண்டுகளுக்கு மேலாக எமது பாடசாலையில் ஆசிரியராகவும் உப அதிபராகவும் சேவையாற்றி இன்று பணி ஓய்வுபெறும் உப அதிபரின் ஓய்வு காலம் சிறப்பாகவும் மகிழ்ச்சியாகவும் அமைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

இன்று 12.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் பாராட்டு விழா நடைபெறும்.

**ஆசிரியர் கழகம்,**
**யா/புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம், புத்தூர்** (62777)

## சிங்கப்பூர், மலேசியாவில் உயர்கல்வி

COMPUTER, ACCOUNTING, HOTEL MANAGEMENT, ENGINEERING (CIVIL, ELECTRICAL, MECHANICAL), ACCA, CAT, CIMA கற்கைகள்
★ குறைந்த அடிப்படைத் தகைமை G.C.E. (O/L)
★ 3 ஆண்டுக் கற்கைகள் UK மற்றும் Australia வில்
★ விரைவான பயண ஏற்பாடுகள் (2, 3 கிழமை)
★ கல்லூரி அனுமதி, Student Visa, தங்குமிட வசதிபற்றிய விவரங்களுக்கு

இடம்: யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபம் (MPCS), இல. 127, K.K.S.Road, யாழ்ப்பாணம். (பிரதான தபாலகம் முன்பாக)
காலம்: 21ஆம் திகதி சனிக்கிழமை (21.07.2007) காலை 9.30 - 12.30 வரை
தொலைபேசி மூலம் நேர ஒதுக்கீடு செய்வது விரும்பத்தக்கது.

**GOLDEN EDUCATION SERVICES**
(62771) 077 9672883, 222 5503

## முக்கிய அறிவித்தல்

### கிருஷ்ணா அடகு கடை,

370, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 222 5046
பதிவு இல. J/DS/BR/472

மேலே குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2006 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30ஆம் திகதிக்கு (30.06.2006) முன்னர் அடகுவைத்து மீட்கப்படாதிருக்கும் அடகு நகைகள் யாவும் 2007 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 31ஆம் திகதி (31.08.2007) விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

370, K.K.S. Road, Jaffna. (62142) A.S.சுரேந்திரன் உரிமையாளர்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



**தெய்வேந்திரன் சதீஸ்**
தாயின் மடியில் 17-06-1976
இறைவன் மடியில் 03-08-2003
திதி: சஷ்டி

ஆண்டுகள் நான்கு சென்றாலும்
ஆறவில்லை உன்பிரிவின் துயரம்
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அவை அனைத்திற்கும் ஈடாகுமா
உன் அன்பு.

தகவல்:
**தந்தை**
ஜெயா வைண்டிங் வேக்ஸ்,
யாழ்ப்பாணம்.
லண்டன். (62774)

## உடன் விற்பனைக்கு

PANASONIC டெக், கரம்போட், மின் உபகரணங்கள், இந்திய தமிழ், ஆங்கில சஞ்சிகைள், புதிய, பழைய பௌதிகவியல், இணைந்த கணிதப் புத்தகங்கள் தமிழ், ஆங்கில மொழிகளில் உண்டு. Past Paper Books, ஆங்கில மொழிமூல சமையல் புத்தகங்கள், தமிழ், ஆங்கில CD க்கள். தினசரி ஒரு மணிக்குப் பின்பு.
T.P.: 077 6648751
R.பாலசுப்பிரமணியம் B.Sc.(Cey.), Dip.in Edu.
பௌதிகவியல் ஆசிரியர்,
42/1, இந்துக் கல்லூரி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம்.
(கடையிற் சுவாமியார் வீதிக்கு முன் உள்ள ஒழுங்கை) (62765)

## இந்தியாவில் கல்வி கற்கும் வாய்ப்பு பிருந்தாவன் கல்லூரி

பெங்களூர் பல்கலைக் கழகத்துடன் இணைந்தது

கல்வி நெறிகள்: B.Sc. B.B.M. B.C.A. B.Com.

அடிப்படைத் தகைமை க.பொ.த (உயர்தர) 2 பாடங்களில் சித்தி
இணையுங்கள் ஜூலை 30இற்கு முன்னர்

**Company Secretarial Services(Pvt.)Ltd.**
285C-1/1 Stanley Tillakaratne Mawatha, Nugegoda.
மேலதிக விவரங்களுக்கு தொடர்புகொள்ளவும்
தொலைபேசி இலக்கம் - 0777 317043

## நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு, இளநரை, தலையிடி, தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகின்றீர்களா?

இதோ பாவியுங்கள்!
கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும், கறுப்பாகவும், அழகாகவும் வளரச்செய்யும் சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

### சித்தாரா பொன்னாங்காணி தைலம்

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
**SITHARA PRODUCTS**
Puttalam Road,
Chilaw.
(Reg.No. 6382)AR/PR/No-228

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:-
**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**குறிப்பு:** எங்களின் பொன்னாங்காணி தைலத்தின் பெட்டியில் எழுத்து மிகவும் தெளிவாகத் தெரியும். போலியான பொன்னாங்காணி தைலத்தின் எழுத்து தெளிவற்றதாக இருக்கும். அத்துடன் போலிப் பெட்டிகளின் அடிப்புறத்தில் உற்பத்தித் திகதியும் முடிவு திகதியும் குறிப்பிடப்படவில்லை. இதிலிருந்து போலித் தயாரிப்புக்களை நீங்கள் கண்டுகொள்ளலாம். (சி-52815)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமை புரியும் **தர்மலிங்கம் சாந்தசொரூபி** அவர்களின் அன்புத் தந்தை

### கந்தையா தர்மலிங்கம்

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
(62767) தாதிய உத்தியோகத்தர், நலன்புரிக் கூட்டுறவுச்சங்கம்.

## இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்

கேள்விப்பத்திர இலக்கம்: எஸ் எல் சி சி/எப் எப்/சி எல்/ 2007

### சூளை எண்ணெய் (Furnace Fuel) விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரம் கோரல்

சூளை எண்ணெய் விற்பனை செய்வதற்காக சீல் பொறிக்கப்பட்ட கேள்விப் பத்திரங்கள் இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத்தால் கோரப்படுகிறது.

| பொருள்கள் | தொகை | பொருள்கள் இருக்குமிடம் |
|---|---|---|
| சூளை எண்ணெய் | 3,232 பரல்கள் (ஒவ்வொன்றும் 210 லீற்றர்) | இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை |

(தெரிவுசெய்யப்படும் கேள்விப்பத்திரக்காரர் (Tenderar) தனது செலவிலேயே பொருள்களை மேற்படி தொழிற்சாலை வளாகத்திலிருந்து எடுத்துச்செல்லல் வேண்டும்)

விலை கூறல்கள் எமது யாழ். காரியாலயத்தில் பெற்றுக்கொண்ட கேள்விப்பத்திர ஆவணங்கள் மூலம் *இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணக் காரியாலயம், வேம்பன் லேன், உரும்பிராய்* என்னும் முகவரிக்கு அனுப்பப்படல்வேண்டும்.

சூளை எண்ணெயின் பரிசோதனைக்குப் பகுப்பாய்வு விவரங்களையும் ஏனைய விவரங்களையும் கொண்ட கேள்விப்பத்திர ஆவணங்கள் மேற்படி விலாசத்தில் உள்ள அலுவலகத்தில் மீளப் பெறமுடியாத பணமாக ரூபா 2,000 செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளமுடியும். கேள்விப்பத்திர ஆவணங்கள் 20.07.2007 இலிருந்து 30.07.2007 பி.ப. 1.30 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

*விலை கூறல்கள், தலைவர், கேள்விப்பத்திர சபை, இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்* என முகவரியிட்டு கேள்விப்பத்திரப் பெட்டியினுள் அல்லது பதிவுத்தபால் மூலம் மேற்படி விலாசத்திற்கு 30.07.2007 பி.ப. 2 மணிக்கு முன்பாக அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

மேலதிக விவரங்களை எமது யாழ். காரியாலய விநியோக உத்தியோகத்தரிடம் 021 222 2128 என்ற தொலைபேசி இலக்கம் மூலம் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
*கேள்விப்பத்திர சபை,*
*இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்,*
*130, டபிள்யூ.ஏ.டி.ராமநாயக்க மாவத்த,*
*கொழும்பு -02.* (சி/52973)

## யாழ்ப்பாண வணிகர் கழகத்திற்கு உதவி எழுதுவினைஞர், கணனி வடிவமைப்பாளர் தேவை

யாழ்ப்பாண வணிகர் கழகத்திற்கு உதவி எழுவினைஞர் தேவை. 50 வயதிற்கு மேற்பட்ட ஆங்கில அறிவுள்ள (ஆங்கிலத்தில் கடிதம் எழுத, வாசிக்கத் தெரிந்த) அரச தனியார் சேவையிலிருந்து இளைப்பாறியவர்கள் விண்ணப்பிக்கலாம்.

கணனி (தமிழ், ஆங்கிலம்) வடிவமைப்பாளர் தேவை. க.பொ.த உயர்தரம் பூர்த்தி செய்த கணக்கியல் அறிவுள்ள பெண் அலுவலர் தேவை. ஆங்கில அறிவு விரும்பத்தக்கது. (யாழ்.நகரப் பகுதிக்கு உட்பட்டவர் விரும்பத்தக்கது).

விண்ணப்பங்கள் 28.07.2007இற்கு முன் ஏற்றுக்கொள்ளப்படும்.

165, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் வணிகர் கழகம்.
யாழ்ப்பாணம். (சி/52972)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**முதலி தங்கம்மா**
மலர்வு: 05-03-1927
உதிர்வு: 11-08-2005
திதி: பூர்வபக்க சஷ்டி
(2007-07-20 வெள்ளிக்கிழமை)

ஆண்டிரண்டு ஆனதுவோ
அம்மா உனைப் பிரிந்து
யாண்டும் உனைத் தேடுகிறோம்
அழியாத துயர் சுமந்து.

விடத்தற்பளை வீதி,
உசன், மிருசுவில். - குடும்பத்தினர். (62137)

## ஓராண்டு நினைவுகளில்...

மண்ணில் 18.01.1938
விண்ணில் 20.07.2006



**அமரர் செபஸ்ரியாம்பிள்ளை செல்வரத்தினம்**

பாசத்தின் உறைவிடமே....
விண்ணகத்தில் குடி புகுந்து
விரைந்ததையா ஓராண்டு
மாறாத உம் பாசம் மறவாத உறவுகளாய்...

"ஆண்டவருக்குள் இறப்பவர்கள் பெறுபெற்றோர் ஏனெனில் அவர் செய்த நன்மைகளே அவர்களை பின் தொடர்ந்து கூடவரும்"

4ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை. மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். (62634)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் I அனுமதி: புதிய வழிகாட்டல்களை உயர் நீதிமன்றம் தயாரித்து வழங்கும்

## ஜனாதிபதி செயலர் தயாரித்த அறிக்கை நிராகரிப்பு

கொழும்பு,ஜூலை20

பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான வழிகாட்டல்களைக் கொண்ட புதிய சுற்றறிக்கையொன்றைத் தயாரிப்பது பற்றி உயர் நீதிமன்றம் ஆலோசித்து வருகின்றது. ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட வழிகாட்டல் நெறிகளை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்ட நிலையில் உயர் நீதிமன்றம் புதிய வழிகாட்டல் நெறிகளை வகுத்து வழங்குவது பற்றி ஆலோசித்து வருகின்றது.

இவ்வாறு புதிய வழிகாட்டல் நெறிகளை உருவாக்குவதற்கு முன்னர் பெற்றோர், பழைய மாணவர் சங்கங்கள், கல்விமான்கள், ஆசிரியர்கள் மற்றும் அக்கறையுள்ள தரப்புகளின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் உயர்நீதிமன்றம் ஆராயும் என்று தெரிகின்றது.

இவ்வாறு அவர்கள் தமது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் சமர்ப்பிப்பதற்கு வழி செய்யும் வகையில் இது தொடர்பான அடிப்படை உரிமைகள் மனுவை நீதிமன்றில் சமர்ப்பிக்கும்படி உயர் நீதிமன்றப் பதிவாளரைப் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா பணித்துள்ளார்.

அம்பலாங்கொட தர்மாசோக்கக் கல்லூரியில் தனது பிள்ளையைச் சேர்ப்பதற்கான முயற்சியில் தோல்விகண்ட பெற்றார் ஒருவர் செய்து கொண்ட அடிப்படை உரிமை மனு மீதான விசாரணை நடைபெற்றபோது நீதிமன்றம் ஏற்கனவே நடைமுறையில் இருந்த வழிகாட்டல் நெறிகளை ரத்துச் செய்தும் புதிய வழிகாட்டல் நெறிகளைச் சமர்ப்பிக்கும்படியும் கூறி இடைக்கால உத்தரவு ஒன்றைப் பிறப்பித்திருந்தது.

இதையடுத்து ஜனாதிபதியின் செயலாளர் புதிய வழிகாட்டல் நெறிகளை நீதிமன்றில் தாக்கல் செய்தார். ஏற்கனவே ரத்துச் செய்யப்பட்ட வழிகாட்டல் நெறிகளைப் போன்றே அமைந்திருந்த இப்புதிய வழிகாட்டல்களில் புள்ளிகள் வழங்குத் திட்டம் கைவிடப்பட்டிருப்பது தெரியவந்ததுடன் இது மிக முக்கியமான அம்சம் என்று நீதிமன்றம் கருதியது.

புள்ளிகள் இடும் முறை இல்லாது போனால் அதிபர்களும் கல்வி அதிகாரிகளும் மாணவர் அனுமதி விடயத்தில் தமது விருப்பு வெறுப்புகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கு வழியேற்படும். இது ஊழல் மோசடிகளுக்கு வழிவகுப்பதாய் இருக்கும் என்று நீதிமன்றம் கருதியது. (ப)

## நாளை சில பகுதிகளில் மின்விநியோகம் தடை

யாழ்ப்பாணம்,ஜூலை20

குடாநாட்டில் சில பகுதிகளில் நாளை சனிக்கிழமை மின்தடை காலை 8 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை நடைமுறையில் இருக்கும் என மின்சார சபையின் யாழ். பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு, வடமராட்சி ஆகிய பகுதிகளிலேயே மின் தடை நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (1)

## கடவுச்சீட்டு விண்ணப்பம் பெற தென்மராட்சியில் புதிய நடைமுறை

யாழ்ப்பாணம்,ஜூலை20

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் கடவுச்சீட்டு விண்ணப்பப்படிவம் பெறுவதற்கு புதிய நடைமுறை அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

கடவுச்சீட்டு படிவம் பெறவுள்ளோர் தமது குடும்பப் பங்கீட்டு அட்டை, தேசிய அடையாள அட்டை ஆகியவற்றைச் சமர்ப்பித்து படிவத்தினைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (202-207)

## யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூலை20

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சை அலகினால் நடத்தப்படும், கலை முதல் தேர்வு வெளிவாரிப் பரீட்சைகள் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகின்றன.

நாளை ஆங்கிலப்பாடமும் எதிர்வரும் 28 ஆம் திகதி இந்து நாகரிகப் பாடமும் ஒகஸ்ட் மாதம் 4ஆம் திகதி தமிழ்ப் பாடமும் இடம் பெறவுள்ளன. (1)

## கிளைப் பொதுச்சபை கூட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை20

காரைநகர் பனை, தென்னை வள அபிவிருத்திச் சங்கத்தின் கிளைகளின் பொதுச் சபைக் கூட்டங்கள் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணி முதல் இடம்பெறவிருக்கின்றன. ஐந்து இடங்களில் இக்கூட்டங்கள் இடம் பெறும். (1)

## சுற்றாடல் விஞ்ஞானச் சான்றிதழ் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஜூலை20

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் சுற்றாடல் விஞ்ஞான சான்றிதழ் கற்கை நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஜி.சீ.ஈ. சாதாரணத்தில் மூன்று பாடங்களில் திறமைச் சித்திகளுடன்(ஆங்கிலம் உட்பட) ஆறு பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்கமுடியும்.

சுற்றாடல் சம்பந்தமான துறைகளில் தொழில் அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.

விண்ணப்பங்களை திறந்த பல்கலைக் கழகம் அமைந்துள்ள நாவல, நுகேகொட என்னும் முகவரியிலும் கண்டி, மாத்தறை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் உள்ள பிராந்திய நிலையங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

கொழும்பில் ஆங்கிலத்திலும் ஏனைய இடங்களில் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளிலும் கற்கைநெறி நடைபெறும்.

விண்ணப்பங்களை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 6ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பிவைக்கவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 2805566, 2807565 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு அறிந்துகொள்ள முடியும். (50-86)

## நன்கொடை கொடுப்பனவுகளை பெறக் கோரிக்கை

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த அரச உதவி நன்கொடைக் கொடுப்பனவுகளைக் பெற்றுக் கொள்ளும் பயனாளிகள் எதிர்வரும் 25ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்பதாக தமக்குரிய கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு ஆனைப்பந்தி உபதபாலதிபர் அறிவித்துள்ளார். (50-111)

## இலங்கைக்கான உதவிகள் குறித்து ஜேர்மன் தூதுவருடன் விவாதிக்கவில்லை

### - ரணில்



கொழும்பு,ஜூலை20

அண்மையில் கொழும்பிலுள்ள ஜேர்மன்தூதுவர் ஜூர்கன் வீர்த்தை தாம் சந்தித்த பொழுது, அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே கூறுவது போல் இலங்கைக்கான உதவிகள் தொடர்பான கொள்கைகள் பற்றி விவாதிக்கவில்லை என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மறுத்துள்ளார்.

தற்போது இலங்கையில் உள்ள ஜேர்மன் தூதுவர் இங்குள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தூதுவர்களின் தலைவராகவும் விளங்குகின்றார். அத்துடன் அவர் கடந்த மாதம் 26, 27 ஆம் திகதிகளில் ஒஸ்லோவில் நடைபெறவுள்ள இணைத் தலைமை நாடுகளின் மாநாட்டிலும் கலந்து கொண்டவர்.

எனவே இணைத்தலைமை நாடுகள் மாநாட்டின் முடிவுகள் பற்றி ஜனாதிபதிக்கும் எனக்கும் விளக்கிக் கூறும் பொறுப்பும் அதிகாரமும் அவருக்கு இருக்கின்றது - என்று எதிர்க்கட்சித் தலைவர் கூறினார்.

ஜேர்மன் தூதுவர் தம்மைச் சந்திக்க விருப்பம் தெரிவித்ததுடன் ஹில்ரன் ஹோட்டலில் இரவு விருந்துக்கும் ஏற்பாடு செய்திருந்தார். அங்கு ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்புப் பற்றி அமைச்சர் பிரேம ஜயந்த நாடாளுமன்றில் குறிப்பட்டபோது, அதற்கு முன்கூட்டியே இது பற்றித் தாம் அரசுக்கு இச்சந்திப்புப் பற்றி அறிவித்திருந்ததாகவும் - இணைத்தலைமை நாடுகளின் கூட்டத்திற்கு முன்னரே ஜேர்மன் இலங்கைக் கான உதவிகளை நிறுத்தியிருந்தது-

ராஜபக்ஷ சகோதரர்கள் பிரதான பிரச்சினைகளை மூடி மறைத்து விட்டு தம்மீது சேறுபூசப் பார்க்கிறார்கள்- என்றும் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டினார். (அ-ப)

## வடக்கு, கிழக்கில் படுகொலைகள் ஜூனில் இரண்டு மடங்காக உயர்வு

கொழும்பு,ஜூலை20

இலங்கையின் வடக்கிலும் கிழக்கிலும் இடம்பெறும் படுகொலைகளின் எண்ணிக்கை ஜூன் மாதத்தில் இரட்டிப்பாகியுள்ளது. இது உன்னிப்பான அவதானிப்பை ஈர்த்துள்ளது.

- இவ்வாறு ஐ. நாவின் ஜூன் மாத நிலைவர அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் விவரிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜூனில் 277 பேர் இவ்வாறு கொலையுண்டுள்ளனர். இந்த எண்ணிக்கை மேற்படி சம்பவங்களின் அதிகரிப்பைச் சுட்டுகின்றது.

மே மாதத்தில் 141 பேரும், ஏப்ரலில் 187 பேரும் கொல்லப்பட்டிருந்தனர்.

மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய பகுதிகளிலேயே பெரும் பாலான படுகொலைகள் இடம்பெற்றுள்ளன.

அதேவேளை திருகோணமலை, கிளிநொச்சி, அம்பாறை, மன்னார் ஆகிய பகுதிகளிலும் வன்முறைகள் நீடித்தவண்ணமுள்ளன.

வவுனியாவில் 11இலிருந்து 73 ஆகவும், யாழ்ப்பாணத்தில் 28 இலிருந்து 51 ஆகவும், மட்டக்களப்பில் 25 இலிருந்து 63 ஆகவும் படுகொலைகளின் எண்ணிக்கைகள் அதிகரித்துள்ளன. (சி)

## சிங்கள வெறியாட்டத்தை சிங்களத்துடன் நிறுத்துங்கள்! புனிதமான புத்த மதத்துக்கு அதனை விஸ்தரிக்காதீர்கள்!!

### சபையில் ஈழவேந்தன் உபதேசம்



கொழும்பு,ஜூலை20

''சிங்கள வெறியாட்டத்ந்த சிங்களத்தோடு நிறுத்திவிடுங்கள். அமைதியைப் போதிக்கும் புனிதமான புத்தமதத்திற்கு அதை விஸ்தரிக்காதீர்கள். புத்த மதத்தை சிங்கள வெறியாட்டத்துடன் இணைக் காதீர்கள்!''

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ம.க.ஈழவேந்தன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:-

புத்தர் கண்ணியமான - அமைதியான - சீலம்மிக்க - சாமுண்யமான - வழியைக் காட்டும் புத்த மதத்தையே போதித்தார். ஆனால், சிங்களவர்கள் புத்தமதத்தை வெறித் தனமான ஒரு மதமாக மாற்றிவிட்டனர்.

இப்போது புத்தர் மீண்டும் வந்தால் சிங்களவர்களின் வெறியாட்டத்தைப் பார்த்து மனம் வெதும்புவார். அவர் போதித்த புத்த மதம் அழிந்துபோனதையிட்டு கவலைப் படுவார்.

'புத்தம் சரணம் கச்சாமி' என்று தொடங்கி 'தமிழன் மரணம் கச்சாமி' என்றுதான் சிங்களவர்கள் முடிக்கிறார்கள்.

நாங்கள் புத்தரையும், பௌத்ததேரர்களையும் மதிக்கின்றோம். ஆனால், சிங்ளவர்கள்தான் பௌத்த தேரர்களையும், புத்த மதத்தையும் இழிவுபடுத்துகின்றனர்.

அண்மையில் தென் ஆபிரிக்காவுக்கு விஜயம் மேற்கொண்ட நான் முன்னாள் தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவுடன் கடிதம் மூலம் தொடர்பை மேற்கொண்டேன்.

அவர் சுகவீனமாக இருப்பதன் காரணமாக அவரால் என்னைச் சந்திக்க முடியவில்லை. அவர் என்னைச் சந்திக்க முடியாமல் போனமைக்கு கடிதம் மூலம் தமது வருத்தத்தைத் தெரிவித்தார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை அவர் நல்ல முறையில் விளங்கியுள்ளார் என்று அக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்தார். சிங்களவர்களால் பாதிக்கப்படும் எமது தமிழ் மக்களுக்கு சர்வதேச நாடுகள் நிச்சயம் உதவும் - என்றார் ஈழவேந்தன். (சி)

## உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவர நடவடிக்கை

கொழும்பு,ஜூலை20

அகதிமுகாம்கள் மற்றும் வெளிப் பிரதேசங்களில் தற்காலிகமாக வதியும் கிழக்கு மக்களுக்கு உள்ளூராட்சித் தேர்தலின்போது தற்போது வதியும் இடத்திலிருந்தே வாக்களிக்கும் வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தீர்மானித்துள்ளது.

பொதுத் தேர்தலின்போது பிரதேசத்துக்கு வெளியே வதியும் ஆட்களுக்கு வாக்கினைப் பயன்படுத்தச் சந்தர்ப்பம் இருந்தாலும், உள்ளூராட்சித் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் சம்பந்தப்பட்ட பிரதேசத்துக்கு வெளியே உள்ளவர்களுக்கு வாக்கைப் பயன்படுத்த முடியாதென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

உள்ளூராட்சிக் கட்டளைச் சட்டத்தை திருத்தம் செய்கையில் கிழக்கு மாகாணத்துக்கு வெளியேயுள்ள பிரதேசங்களில் வதிபவர்களும் வாக்கைப் பயன்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கும்வகையில் இந்தக் கட்டளைச்சட்டம் திருத்தம் செய்யப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

கிழக்கு உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னர் இடம்பெற்ற வேட்பு மனுக்கள் கோரலின்போது 35 வயதுக்கு குறைவாக இருந்த 10 இளைஞர்கள் தற்போது அந்த வயதெல்லையைக் கடந்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இவ்விடயங்கள் யாவற்றையும் உள்ளடக்கி உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான யோசனைகள் இவ்வாரத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக எனவும் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (சி)

## எப்பிறப்பிலும் சிறந்த நண்பன் தானமே

பெரியோர்களை எப்போதும் எழுந்து பணிவுடன் வணங்கும் இயல்புடையவனுக்கு ஆயுள், கல்வி, புகழ், பலம் ஆகிய நான்கும் அதிகரிக்கின்றன.

ஒருவனுடைய தலை, நரையால் வெளுப்பதால் மட்டுமே அவன் வயது முதிர்ந்தவன் ஆவதில்லை. இளைஞனாக இருந்தாலும் எவன் நன்கு கற்றவனாக இருக்கின்றானோ அவனையே வயது முதிர்ந்தவன் என்று தேவர்கள் கூறுகிறார்கள்.

குருவினால் தூண்டப்பட்டாலும் தூண்டப்படாவிட்டாலும் எப்பொழுதும் கல்வி கற்பதிலும், குருவிற்கு நன்மை செய்வதிலும் சீடன் முயற்சி உள்ளவனாக இருக்கவேண்டும்.

எந்தப் பிராணியையும் துன்புறுத்தாமல் - கறையான் பூச்சிகள் சிறிதுசிறிதாகப் புற்றை அமைப்பதுபோல் - மறு உலகிற்கு நன்மை ஏற்படும் வகையில் சிறிது சிறிதாகத் தர்மத்தைச் சம்பாதிக்க வேண்டும்.

ஞானக்கதிர்

அழிக்கப்பட்ட (காப்பாற்றப்படாத) தர்மமே ஒருவனை அழிக்கிறது; தர்மம் காப்பாற்றப்பட்டால் அதுவும் காப்பாற்றும். எனவே, தர்மம் அழிக்கப்படத்தக்கது அல்ல; அழிக்கப்பட்ட தர்மம் நன்மை அழிக்கவேண்டாம். (அத்தகைய நிலைக்கு நாம் இடம் தரக்கூடாது).

தாயிடம் உள்ள பக்தியால் இந்த உலகமும், தந்தையிடம் காட்டும் பக்தியால் இடையில் உள்ள (மத்யம், அந்தரிக்ஷம்) உலகமும், குருவிற்குப் பணிவிடை செய்வதால் பிரம்ம லோகமும் அடையப்படுகின்றன.

மரணத்திற்குப் பிறகும் தொடர்ந்துவரும் தர்மம் ஒன்றுதான் சிறந்த நண்பன். மற்ற[illegible]த்தும் உடலுடன் அழிந்துவிடுகின்றன அல்லவா.

நன்றி:ஞானச்சுடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிரடி விலைக்கழிவில்

விடுமுறை நாள்களில் மிக மிக குறைந்த கட்டணத்தில் இலங்கை முழுவதுக்கு மான அழைப்புகளுக்கு

**6/- மட்டுமே**

ஏனைய முழுநாள்களுக்கும்

மலேசியா, சிங்கப்பூர் - 15/-, இந்தியா - 20/-

அரபு நாட்டிற்கு - 50/-, ஐரோப்பிய நாடுகளுக்கு - 10/-

## லக்சுமி கொமினிகேசன்

சுன்னாகம் கிழக்கு, மலப்பை. தொ.பே. 021 4591938


## தேசத்தின் சமாதானத்திற்கான பொதுவான

### ஐக்கிய உபவாச ஜெபம்

இடம்: தேவசபை (A.O.G)
No: 14, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம்.

காலம்: நாளை (21.07.2007) சனிக்கிழமை

நேரம்: ஆரம்பம் காலை 9 மணிமுதல்

ஜெபிக்க விரும்பும் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

யாழ்.சபைகள் ஸ்தாபனங்களின் ஐக்கியம்,
போதகர் ஒன்றியம், யாழ்ப்பாணம்.

(62789)

# ஓராண்டு நினைவலைகள்

## விஸ்வலிங்கம் கௌரூபன்

(சிறுப்பிட்டி எரிபொருள் நிரப்பு நிலையம்,
N.V.P. ஹாட்வெயர் உரிமையாளர்)

மலர்வு 09.08.1980 உதிர்வு 30.07.2006

திதி: ஷஷ்டி 20.07.2007



இமையூரின்
இமையவனே
ஆற்றலின் வடிவாய்
அவனியில் அவதரித்த
அவதார புருசனே
அகிலமதை விடுத்து -நீ
அகன்று ஆறிரு
மாதங்களாயினும்
நீங்காது எம்மனதில்
உன் நினைவுகள்

அறிவாலயம்,
இமையாணன், உடுப்பிட்டி.

குடும்பத்தினர்.

(62124)

## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளில் 31.03.2006 இற்கு முன்பு அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் வைத்துப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| தொடர் இல. | கிளை | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் விடப்படும் இடம் |
|---|---|---|---|
| 1 | யாழ்.பிரதான வீதி - 104 | | |
| 2 | சேவை நிலையம், உரும்பிராய் | | |
| 3 | சாவகச்சேரி - 110 | | |
| 4 | யாழ்.பல்கலைக்கழகம் - 162 | 2007.09.08 | |
| 5 | சேவை நிலையம், திருநெல்வேலி | 2007.09.09 | |
| 6 | யாழ்.கன்னாதிட்டி - 284 | 2007.09.15 | |
| 7 | சேவைநிலையம், இணுவில் | 2007.09.16 | மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதி |
| 8 | யாழ்.ஸ்ரான்லி வீதி - 030 | 2007.09.17 | |
| 9 | சேவைநிலையம், மானிப்பாய் | & | |
| 10 | காங்கேசன்துறை - 031 | 2007.09.18 | |
| 11 | சேவைநிலையம், மல்லாகம் | | |
| 12 | அச்சுவேலி - 107 | | |
| 13 | சங்கானை - 108 | | |
| 14 | சுன்னாகம் - 109 | | |
| 15 | வல்வெட்டித்துறை - 141 | 2007.09.08 | |
| 16 | நெல்லியடி - 106 | & | மக்கள் வங்கி நெல்லியடி |
| 17 | பருத்தித்துறை - 285 | 2007.09.09 | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடும் உரிமை வங்கிக்கு உள்ளது.

உதவிப்பொது முகாமையாளர்,
மக்கள் வங்கி, பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-52980)

### உயர்தர மாணவர்களுக்கு கருத்தரங்கு

வலி. வடக்கு ஜூலை 20

சுன்னாகம் றோட்டரக்ட் கழகம் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் வர்த்தக, கலைப் பிரிவு மாணவர்களுக்கென நடத்தும் கருத்தரங்கு நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9.00மணி முதல் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வர்த்தகப் பிரிவில் பொருளியல், கணக்கீடு, வணிகக் கல்வி ஆகிய பாடங்களுக்கும் கலைப்பிரிவில் அளவையியல், இந்து நாகரிகம், தமிழ், புவியியல், நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்களுக்கும் இக்கருத்தரங்கில் விளக்கமளிக்கப்படும்.

இந்தக் கருத்தரங்கில் மாணவர்களை கலந்து கொள்ளும்படி சுன்னாகம் றோட்டரக்ட்கழகம் கேட்டுள்ளது. (50-86)

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையிடம் 29 - 05 - 1944



ஆண்டவனிடம் 20 - 07 - 2001

### அமரர் ஜோ.ச.சத்தியநாதன்

(ஓய்வுபெற்ற கணக்குப் பதிவாளர், பனை அபிவிருத்திச் சபை)

காலமெல்லாம் கண்ணுள் எம்மை வைத்து
காத்து வந்த எந்தன் அப்பாவே! எம்
கண்ணில் தென்படாது விட்டகன்றது
கணப்பொழுது போலுள்ளது
ஆனாலும் ஆறு ஆண்டுகள் சென்றுவிட்டன
கருத்துடன் எம்மை கவனிக்க ஒருதடவை
கருணை கூர்ந்து வாருங்கள் அப்பாவே!

'மடத்துக்கடவை'
அல்வாய் மேற்கு,
அல்வாய்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மகன்,

(62769)

## கண்ணீர் அஞ்சலி

நல்லூர் பிரதேச சபையில் கடமையாற்றும்
திரு.வே.பிரதாபன் அவர்களின் பாசமிகு தந்தையும்.
திருமதி சிவனாந்தி பிரதாபனின் அன்பு மாமனுமாகிய

### கனகசபை வேலாயுதன்

அவர்கள் 19.07.2007 அன்று காலமாகிவிட்டார். அவரது மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நலன்புரிச் சங்கம், நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி. (62791)

## மத்தியின் முத்துக்களுக்கு யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகத்தின்

### கண்ணீர் அஞ்சலி



அமரர் என்.எஸ்.இரத்தினசிங்கம்
(யாழ்.மத்திய கல்லூரி
முன்னாள் அதிபர்)



அமரர் எஸ்.செல்வராஜா
(யாழ்.மத்திய கல்லூரி
கிரிக்கெட் அணித்தலைவர் 1946.
கல்லூரி கிரிக்கெட் அணி பயிற்றுநர்)

*யாழ்.மத்தியின் முத்துக்களில் ஒருவர் கல்லூரி துணை அதிபராக, அதிபராக இரு தசாப்தங்களை அண்மித்த காலம் கல்லூரி அன்னையை அலங்கரித்தவர். புலம் பெயர்ந்து ஆஸ்திரேலியா மண்ணில் அமரராகி விட்டார். அவர் ஆன்மா சாந்திபெற அஞ்சலிக்கின்றோம்.*

*செல்வராஜா, மத்தியின் விளையாட்டு வீரர்களின் மத்தியில் செல்வாக்கானவர். அரைநூற்றாண்டுக்கு முன் கல்லூரிக் கிரிக்கெட் அணியை தலைமைதாங்கி அணி செய்தவர். திறமைகளை தன் பின்னே வந்த கிரிக்கெட் வீரர்களுடன் பகிர்ந்து கொண்ட பயிற்றுநர் பண்பாளர். அவரின் ஆன்மா சாந்தி பெற அஞ்சலிக்கின்றோம்.*

செயலாளர்,
யாழ்ப்பாணம். சென்றல் விளையாட்டுக்கழகம்.
JAFFNA CENTRAL SPORTS CLUB.

(62794)

## குருதிக் கொடை நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூலை 20

சித்த மருத்துவ வாரத்தை முன்னிட்டு அதன் இறுதி நாளான நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை குருதிக் கொடை நிகழ்வு நடைபெறவுள்ளது.

கைதடி சித்தமருத்துவத்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வை சித்த மருத்துவத்துறை மாணவர்கள் ஏற்பாடு செய்துள்ளனர். அன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் ஆர்வலர்களைக் கலந்துகொண்டு குருதிக் கொடை வழங்குமாறு சித்த மருத்துவ மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது. (50-75)

## கல்வயல் விவசாயிகளுக்கு சுயமுயற்சிக் கடன்

யாழ்ப்பாணம், ஜூலை 20

இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளை கல்வயல் கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 27 பேருக்கு கல்வயல் விவசாய சம்மேளனத்தின் சிபார்சுடன் சுயமுயற்சிக் கடன்களை வழங்கவுள்ளது.

தெரிவுசெய்யப் படும் பயனாளி களுக்குத் தலா 25ஆயிரம் ரூபா நீண்டகாலக் கடனாக (24 மாதங்கள்) வழங்கப்படவுள்ளது.

இதேவேளை கல்வயல் பகுதியைச் சேர்ந்த 27 விவசாயிகளுக்கு விவசாயக் கடனாக தலா 25ஆயிரம் ரூபா கடந்த 18ஆம் திகதி வழங்கப்பட்டதாக விவசாய சம்மேளனச் செயலாளர் கா.வேதநாயகம் தெரிவித்தார். (50-207)

## மரண அறிவித்தல்

### கனகசபை வேலாயுதன்



திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்த கனகசபை வேலாயுதன் 19.07.2007 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - அன்னப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற கமலாவதியின் அன்புக் கணவரும் பிரதாபனின் (பிரதேச சபை, நல்லூர்) அன்புத் தந்தையும் திருமதி சிவானந்தி பிரதாபனின் (பிரதேச சபை, நல்லூர்) அன்பு மாமனும் ரேணுகனின் பாசமிகு அப்பப்பாவும் காலஞ்சென்றவர்களான தையல்நாயகி, தம்பியப்பா, இராஜேந்திரன், குகதாசன், மதிவதனநாயகி மற்றும் நீர்கொழும்பில் வசித்து வரும் தில்லைநாயகி ஆகியோரின் பாசமிகு தம்பியு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20-07-2007) முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காகத் திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வே.பிரதாபன் (மகன்)

*பழங்கிணற்றடிப் பிள்ளையார் கோயிலடி,
கலாசாலை வீதி,
திருநெல்வேலி.*

(62785)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# முப்பது ஆண்டுகளின் பின் மீண்டும் போரா, சமாதானமா என்ற கேள்வி

"போரா? சமாதானமா? நாம் எதற்கும் தயார். புலிகளே எது வேண்டும் என்பதைத் தீர்மானிக்கட்டும். அந்தப் பாதையில் அவர்களை எதிர்கொள்ள நாங்கள் தயார்!"

- இப்படி பிரகடனம் செய்திருக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. தொப்பிகலவைக் கைப்பற்றி, கிழக்கு மாகாணத்தைப் புலிகளின் பிடியிலிருந்து முற்றாக மீட்டுவிட்டதாகத் தென்னிலங்கை மார்தட்டும் நிலையில், அந்த வெற்றிக்களிப்போடு புலிகளைப் பார்த்து போரா, சமாதானமா எனச் சவால் விடுகிறார் அரசுத் தலைவர்.

போர்நிறுத்தம் செய்து, சமாதானப் பேச்சுகள் நடத்தி, பல நீண்ட ஆண்டுகள் தொடர்ந்து அமைதி காத்தும் சமாதானத்தின் சாதகங்களை - பலாபலன்களை - அனுபவிக்க முடியாமல் போன துரதிஷ்டத்தில் மூழ்கிக் கிடக்கும் மக்களைப் பார்த்து போரா, சமாதானமா என்று ஏளனத்துடன் கேள்வி எழுப்புகின்றார் இலங்கைத் தலைவர்.

இப்படி தென்னிலங்கைச் சிங்களத் தலைவர்கள் தமிழர் தரப்பைப் பார்த்து நையாண்டித்தனத்துடன் கேள்வி எழுப்புவது இது முதல் தடவையல்ல. முந்தியும் நடந்தது தான்.

முன்னர் ஆயுதம் ஏந்தாமல் - யுத்தம் புரியாமல் - வன்முறையை நாடாமல் - அஹிம்சை வழியில் - காந்தீய நெறியில் - அறநெறிப் பாதையில் - தமிழர்களின் உரிமை வேண்டி தமிழ்த் தேசிய எழுச்சியைப் பிரவாகம் எடுக்கவைத்த மிதவாதத் தலைவர்களைப் பார்த்து, தென்னிலங்கைச் சிங்களத்தின் ஆட்சித் தலைவர் இதேகேள்வியைத்தான் கேட்டார். அதன் விளைவைத்தான் நாடு - இலங்கைத் தீவு - தீராத பழியைச் சுமந்தபடி இன்று அனுபவித்துக் கொண்டிருக்கின்றது.

தமிழினம் தனது சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தனது தாயக பூமியின் இறையாண்மையை நிறுவ உறுதியாகத் தீர்மானம் எடுத்து, அதனைத் தென்னிலங்கையின் அடக்கு முறை சிங்கள அரசின் ஆக்கிரமிப்பாளர்களுக்கும், உலகுக்கும் திட்டவட்டமாகவும், தெளிவாகவும் தெரிவிப்பதற்காக - தனது தேசியப் போராட்டத்துக்கு தமிழர் தாயகத்தின் ஆணையைப் பெறுவதற்காக - 1977 பொதுத் தேர்தலை ஓர் அரங்காகப் பயன்படுத்தத் தீர்மானித்தது.

சுதந்திரத் தமிழீழ அரசை நிறுவுவதற்கான ஆணையைத் தமிழீழ மக்கள் அத் தேர்தலில் ஒன்றுபட்டு வெளிப்படுத்தினர். அதேசமயம் தென்னிலங்கையில் ஜே. ஆர். ஜெயவர்த்தனா தலைமையில் இயங்கிய வலதுசாரி ஐக்கிய தேசியக் கட்சி பெரு வெற்றியீட்டியது.

தென்னிலங்கைச் சிங்களம் ஆளும் தரப்பிலும், தமிழ்த் தேசியத்தை நிலைநிறுத்தப் போராடும் தமிழினம் எதிர்த்தரப்பிலும் பிரதான அணிகளாக அமரும் வாய்ப்பு பெரும் வரலாற்றுத் திருப்புமுனையாக அப்போதுதான் நிகழ்ந்தது

தமிழர் தரப்பின் மிதவாதத் தலைவராக இருந்த அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராகும் சந்தர்ப்பமும் அப்போது கிட்டியது.

நாடாளுமன்றமே தமிழர் தரப்பு, சிங்களத்தரப்பாக - எதிரும் புதிருமாக - கன்னை பிரிந்த அந்தச் சமயத்தில் இலங்கைத் தீவில் இன முரண்பாடு கூர்மையடைந்தது. பொதுத்தேர்தல் முடிந்த கையோடு தமிழருக்கு எதிரான இனக்கலவரம் - ஆவணி அமளி - முன்னரை விடக் குரூர வன்முறையாக வெடித்தது.

ஈழத் தமிழரின் தேசிய ஆன்மாவில் நிரந்தர வடுவை ஆழமாக ஏற்படுத்திய மாபெரும் துன்பியல் நிகழ்வாக ஆவணி அமளி ஆடி அடங்கியபோது, தென்னிலங்கைப் பேரினவாதக் குரூரத் தலைமையின் சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் பேரினவாத முடியரசர் தாமே என்று நினைவூட்டும் விதத்தில், இதே சொல்லாடலைத் தான் அப்போதைய அரசுத் தலைவர் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் பயன்படுத்தினார்.

கொடூர - குரூர - இனக்கலவரத்தின் பின்னர் நாடாளுமன்றம் கூடியபோது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த தமிழர்களின் மிதவாதத் தலைவரான அமிர்தலிங்கத்தைப் பார்த்து, அப்போதைய அரசுத் தலைவரும் பிரதமருமான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா "போரா ? சமாதானமா? நீங்களே தீர்மானியுங்கள். எதற்கும் நாம் தயார்! - என்று மிடுக்கோடு அறைகூவல் விடுத்தார்.

அந்த அறைகூவலின் விபரீதங்களாகக் கட்டவிழ்ந்த பெரும் போரையும், எண்ணிப்பார்க்க முடியாத பேரழிவுகளையும் கடந்த முப்பது ஆண்டுகளாகச் சுமந்துகொண்டு தள்ளாடுகின்றது - தடுமாறுகின்றது - இந்த இலங்கைத் தீவு.

அன்று - இனக்கலவரம் மூலம் தமிழர்களின் தேசிய ஆன்மாவில் ஆழமான வடுவை ஏற்படுத்திய மமதையோடு தமிழர்களின் மிதவாதத் தலைமையிடம் கேட்ட கேள்வியை -

இன்று - தமிழரின் தாயகப் பூமியான கிழக்கை முற்றாக ஆக்கிரமித்து மீட்டுவிட்ட செருக்கோடு தமிழர்களின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத் தலைமையிடம் மீண்டும் எழுப்பு கின்றது சிங்களத் தலைமை.

அன்று கேட்ட கேள்விக்குப் பதிலாக எழுந்த விபரீதங்களும், அதனால் ஏற்பட்ட துன்பியல் அனுபவங்களும் தென்னிலங்கைக்குச் சரியான பட்டறிவைத் தரவில்லைப் போலும். அதனால்தான் மீண்டும் அதே கேள்வி - அதே செருக்கோடு - இப்போதும் திரும்ப எழுகின்றது.

அன்றைய கேள்வியின் விடையாக இத்துணை விபரீதங்கள் நேர்ந்தமைபோல, இன்றைய கேள்வியின் விளைவும் மோசமாக அமையுமா?

காலம்தான் பதில் சொல்லும். அறியக் காத்திருக்க வேண்டும்.

## போரினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்தவர்களின் விவரங்களை மீள்குடியேற்ற அமைச்சுத் திரட்டுகிறது

யாழ்ப்பாணம், ஜூலை 20

உள்நாட்டுப் போர் மற்றும் மோதல்கள் காரணமாக புலம்பெயர்ந்தவர்களின் விவரங்களை மீள்குடியேற்றம் மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சு சேகரிக்கவுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைச்சின் பணிப்பாளர் எம்.ஏ.சி. முகையதீன் சகல பிரதேச செயலர்களுக்கும் சுற்றுநிருபம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

நாடாளுமன்றில் 2007ஆம் ஆண்டில் 9ஆம் இலக்க மீள்குடியேற்ற அதிகாரசபைச் சட்டம் இப்போது நடைமுறைக்கு வந்துள்ளது. அதன் பிரகாரம் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களை மீள்குடியேற்றுவதற்கான பொருத்தமான நடவடிக்கைகளை இச்சபை எதிர்காலத்தில் மேற்கொள்ளவுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார். இதற்கு வசதியாக இடம்பெயர்ந் தோரின் விவரங்கள் சேகரிக்கப்படவுள்ளன.

இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வசிப்பவர்களின் விவரங்கள் தனியாகவும் -

இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களுக்கு வெளியே உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் வசிப்பவர்களின் விவரங்கள் தனியாகவும் - சேகரிக்கப்படவுள்ளதாக அவர் கூறினார்.

கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக இந்த விவரங்களைச் சேகரிப்பதற்காக விசேட படிவங்கள் பிரதேச செயலர்களுக்கு அமைச்சால் அனுப்பப்பட்டுள்ளன.

விவரங்களைப் பூர்த்திசெய்து அவற்றை ஒரு வார காலத்துக்குள் அனுப்புமாறும் கேட்கப்பட்டுள்ளது. (அ-1)

## 'கிழக்கு உதயம்' வெற்றி விழாவையொட்டி குடாநாட்டில் சில இடங்களில் சிங்கக்கொடி

யாழ்ப்பாணம்,ஜூலை 20

கொழும்பில் நேற்று நடைபெற்ற 'கிழக்கு உதயம்' வெற்றி விழாவையொட்டி யாழ்ப்பாணத்திலும் சில இடங்களில் சிங்கக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்தன.

யாழ்.செயலக முன்றிலில் உள்ள கொடிக் கம்பத்தில் நேற்றுக் காலை 7 மணிக்கு சிங்கக் கொடி ஏற்றப்பட்டிருந்தது.

அத்துடன் குடாநாட்டில் பிரதான இராணுவ முகாம்கள், சோதனைச் சாவடிகள், பொலிஸ் நிலையங்கள் என்பவற்றிலும் சிங்கக் கொடிகள் ஏற்றப்பட்டிருந்தன.

யாழ்.வேம்படி வீதியில் அமைந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அலுவலகத்தின் முன்பாகவும் சிங்கக் கொடி ஏற்றப்பட்டிருந்தது. (அ-155-111)

## மாவைக் கந்தன் ஆலயத்தில் காம்யோற்சவம் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜூலை 20

வரலாற்றுப் புகழ் மிக்க மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் காம்யோற்சவம் நேற்றுப் பகல் பக்திபூர்வமாக ஆரம்பமாகியது.

தெல்லிப்பழை இராணுவச் சோதனை நிலையம் ஊடாக பக்தர்கள் தமது அடையாள அட்டைகளை கையளித்து கோயிலுக்குச் சென்றனர். தடங்கல்கள், தாமதங்கள் குறைவு என்று அவர்கள் தெரிவித்தனர்.

சோதனை நிலையத்தில் அடை யாள அட்டைகள் பெறப்பட்டு உடற் பரிசோதனை செய்யப்பட்ட பின்னர் பக்தர்கள் பஸ்களில் ஆலயத்திற்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

காலையில் இருந்து நண்பகல்வரை அடியார்கள் தெல்லிப்பழை சோதனை நிலையத்தில் இருந்து ஆலயத்திற்கு செல்வதற்கான போக்குவரத்து வசதிகளை இராணுவத்தினர் மேற்கொண்டிருந்தனர்.

பல நூற்றுக்கணக்கான அடியவர்கள் ஆலயத்திற்குச் சென்று திரும்பினர். அடியார்களுக்கு ஆலயத்தில் அன்னதானம் வழங்குவதற்கு ஏற்பாடாகி உள்ளது. (அ-1-86)

## கைதான மாணவன் விடுவிக்கப்பட்டார்

யாழ்ப்பாணம் சிவன் பண்ணை வீதியிலுள்ள கணனிப் பயிற்சி நிலையத்தில் வைத்து நேற்றுமுன்தினம் புதன்கிழமை படையினரால் கைது செய்யப்பட்ட மாணவன் அன்று மாலையே விடுவிக்கப்பட்டார்.

கைதடி தெற்கு, கைதடியைச் சேர்ந்த சண்முகம் சஞ்சீபன் (வயது 21) என்ற மாணவனே கடந்த புதன்கிழமை குறிப்பிட்ட கணனிப் பயிற்சி நிலையத்தில் வைத்துப் படையினரால் கைது செய்யப்பட்டார்.

இதனையடுத்து குறித்த கணனிப் பயிற்சி நிலையத்தின் இயக்குநர் எடுத்த முயற்சியை அடுத்து அன்று மாலையே அவர் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்துக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-50)

## யாழ்.பல்கலை துணைவேந்தர் நியமனம்; மூவரின் பெயர்கள் ஜனாதிபதிக்கு சிபார்சு

யாழ்ப்பாணம்,ஜூலை 20

யாழ்.பல்கலைக் கழகத்துக்கு புதிய துணைவேந்தரை நியமனம் செய்வது தொடர்பாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு நேற்றுக் கூடி ஆராய்ந்தது.

பல்கலைக்கழக பேரவை சிபார்சு செய்த மூவரின் பெயர்களை அவர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில், வரிசைக் கிரமப்படி ஜனாதிபதிக்கு அனுப்புவது என மானிய ஆணைக்குழு முடிவு செய்துள்ளது.

பதில் துணைவேந்தர் பேராசிரியர் இ.குமாரவடிவேல், பட்டப் படிப்புகள் பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி, சமூக விஞ்ஞானத் துறைத் தலைவர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் ஆகியோரின் பெயர்கள் ஜனாதிபதிக்கு நேற்று மானிய ஆணைக்குழுவால் அனுப்பப்பட்டுள்ளன.

இவர்களில் ஒருவரை ஜனாதிபதி துணைவேந்தராக விரைவில் நியமனம் செய்வார். (அ-1)

## பொதுநிர்வாக முதுகலைமாணி விரிவுரைகள் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்.பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடத்தினால் நடத்தப்படும் - பொதுநிர்வாகத்தில் முதுகலைமாணி கற்கை நெறிக்கான 2007 - 08 ஆம் ஆண்டுக்கான விரிவுரைகள் நாளை காலை 9 மணிக்கு ஆரம்பமாக உள்ளன.

இந்தப் பீடத்தினால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள முதுகலைமாணி கற்கை நெறிகளான தமிழ், சைவசித்தாந்தம் ஆகியவற்றுக்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 31ஆம்திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படும் என்று பீடாதிபதி பேராசிரியர் க.கந்தசாமி அறிவித்துள்ளார்.

மேற்படி பீடத்தினால் நடத்தப்படும் பட்டப் பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறியின் 2ஆம் வருடத்தின் 2ஆம் அரையாண்டுக்கான விரிவுரைகளும் நாளை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-1)

## ஏ.ஜேயின் நூல்கள் பல்கலைக்கு அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

மறைந்த இலக்கிய விமர்சகரும் பத்திரிகையாளருமான ஏ.ஜே.கனகரத்தினாவின் சேகரிப்பில் இருந்த பல்துறை சார்ந்த ஆயிரத்து 500 நூல்களைப் பல்கலைக்கழக நூலகத்துக்கு கையளிக்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறும்.

அவரது சகோதரரான டபிள்யூ.என்.எஸ்.கனகரத்தினா நூல்களை பதில் துணைவேந்தர் பேராசிரியர் இ.குமாரவடிவேலிடம் கையளிப்பார்.

இந்நிகழ்வில் ஆர்வமுடையோரைக் கலந்துகொள்ளுமாறு கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் கேட்டுள்ளார். (அ-1)

## உயர்தரப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விமானம் மூலம் எடுத்துவரப்பட்டன

யாழ்ப்பாணம்,ஜூலை 20

அடுத்த மாதம் 6ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் குடாநாட்டுப் பரீட் சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள், நேற்று முன்தினம் புதன்கிழமை விமானம் மூலம் எடுத்துவரப்பட்டன.

அவற்றை, கல்வி அலுவலகங்கள் ஊடாகப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை -

ஏனைய மாவட்டங்களுக்கான அனுமதி அட்டைகள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத அல்லது அதில் குறைபாடுகள் உள்ள பரீட்சார்த்திகளை, உடனடியாகப் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறு பரீட்சை ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க அறிவித்துள்ளார். (அ-1-50)

## தரம் 5 மாணவர்களுக்கு நாளை மாகாண மட்ட முன்னோடிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூலை 20

வட மாகாண கல்வி அமைச்சு நடத்தும் தரம் 5 இற்கான புலமைப் பரிசில் முன்னோடிப் பரீட்சை நாளை யாழ். மாவட்டப் பாடசாலைகளில் நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

யாழ்.வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கான வினாத்தாள் பொதிகளை யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் கல்விக் கோட்டங்களின் அலுவலகங்களில் அன்றைய தினம் காலை 7.30 மணிக்கு பெற்றுக்கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

தென்மராட்சி வலயக் கல்விப் பாடசாலைகளின் அதிபர்கள், நாளை காலை 7.30 மணிக்கு பரீட்சை வினாத்தாள்களை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று, பரீட்சை முடிவடைந்த பின்னர் வினாத்தாள்களை வலயக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும் என்று தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

வலிகாமம் வலையத்திற்குட்பட்ட பாடசாலைகளிலும் முன்னோடிப் பரீட்சை இடம்பெறவுள்ளது.

சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பழை ஆகிய கோட்ட அலுவலகங்களில் வினாத்தாள்களை இன்று மாலை பெற்று நாளை பரீட்சையை நடத்துமாறு அதிபர்களை வலிகாமம் வலயப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

வடமராட்சி, தீவகக் கல்வி வலயங்களிலும் வினாத்தாள்களைக் கோட்டங்களில் பெறுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ-1-207)

## நாளை

| | |
|---|---|
| ஆடி - 5 | சனிக்கிழமை 21.07.2007 |
| திதி : சப்தமி | முன்னிரவு 11.11 |
| நட்சத்திரம் : அத்தம் பி.ப.: 01.14 | |
| [illegible] | [illegible] |
| [illegible] | [illegible] |

## தமிழகத்திலும் உயர்தர பரீட்சை நிலையம்

கொழும்பு, ஜூலை 20

எதிர்வரும் 6ஆம் திகதி ஆரம்பமாக உள்ள ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சைக்கான, பரீட்சை நிலையம் ஒன்று தமிழகத்திலும் அமைக்கப்படும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க இத் தகவலைத் தெரிவித்தார்.

அங்கு இலங்கையைச் சேர்ந்த 80 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவர் என்றும் அவர் கூறினார். (அ-1)

## பொதிகள் நீதிமன்றத்தில்

திருகோணமலையிலிருந்து புறப்பட்ட கப்பல் சேவையில் பயணம் செய்தவர்களினால் தவறவிடப்பட்ட பொதிகள் மல்லாகம் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்ட இந்தப் பொதிகளை அடையாளம் காட்டி உரியவர்களை பெற்றுக்கொள்ளுமாறு நீதிமன்றப் பதிவாளர் கேட்டுள்ளார். (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை-அமெரிக்க பாதுகாப்பு ஒப்பந்தம் இன்று நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படுமாம்

கொழும்பு, ஜூலை 20

நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டுக்கொண்டுவரும் அமெரிக்க - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் இன்று பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவால் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப் படவுள்ளது என அரசு நேற்று அறிவித்தது.

கடந்த புதனன்று மேற்படி ஒப்பந்தத்தை இதைச் சமர்ப்பிக்க அரசு இணங்கியிருந்த போதும் அப்படி எதுவும் நடைபெறவில்லை. இதனால் ஜே.வி.பியினர் நேற்று முன்தினம் இந்த விடயத்தை நாடாளுமன்றில் பெரிதுபடுத்தி பெரும் சர்ச்சையில் ஈடுபட்டனர்.

நேற்று ஜே.வி.பியினர் இப்பிரச்சினையை மீண்டும் எழுப்பினர். இது தொடர்பாகத் தாம் நேற்றும் பிரதமருடன் பேசியதாகவும் இன்று பிரதமர் நாடாளுமன்றத்திற்கு வந்து இப்பிரச்சினையைத் தீர்த்துவைப்பார் என்றும் சபாநாயகர் கூறினார்.

பிரதமர் இந்த ஒப்பந்தத்தை இங்கு சமர்ப்பிப்பாரா? இல்லையா என்று இன்று (அதாவது நேற்று ) எமக்கு உடனடியாக அறிவிக்க வேண்டும் - என்றார் விமல் வீரவன்ஸ.

இதற்குப் பதிலளித்த சபை முதல்வர் நிமால் சிறிபால டி சில்வா, இந்த விடயம் பிரதமரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அவர் நாளை (அதாவது இன்று) ஒப்பந்தத்தைச் சமர்ப்பிப்பார் - என்றார். (சி)

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முன்னாள் அதிபருக்கு பிரிவுபசார விழா

யாழ்ப்பாணம், ஜூலை 20

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முன்னாள் அதிபர் மு. பரஞ்சோதிக்கு பிரிவுபசாரம் அளித்து கௌரவிக்கும் விழா இன்று முற்பகல் 9 மணிக்கு காலாசாலையின் ரதிலக்சுமி மண்ட, வீரமணி ஐயர் அரங்கில் இடம்பெறவுள்ளது.

சிரேஷ்ட மாணவர் முதல்வர் நா. செல்வச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் வே. தி. செல்வரத்தினம், கலா சாலை அதிபர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, விரிவுரையாளர்களான கலாநிதி செ. திருநாவுக்கரசு, இ. மருதலிங்கம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

முன்னாள் அதிபர் சேவையில் இருந்து ஓய்வு பெறுவதையொட்டி இப்பிரிவுபசார விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-1)

## மட்டுவிலில் ஞாயிறு மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

மட்டுவில் பிரதேச மக்களுக்காக இலவச மருத்துவ பரிசோதனை முகாம் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் இந்த மருத்துவ பரிசோதனை முகாமை நடத்தவுள்ளனர்.

கண், இரத்த அழுத்தம், நீரிழிவு, பெண் நோயியல், தொழுநோய், வாய்ப்புற்று, பொது மருத்துவம் ஆகிய பரிசோதனைகள் நடத்தப்படவுள்ளதாக கழகத் தலைவர் லயன் ஆர். ஜெயபாலன் அறிவித்துள்ளார். (1-207)

## மேற்குலக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரியா ஆகியவற்றின் தூதர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

ஆளுந்தரப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உட்பட அனைத்து முஸ்லிம் கட்சிகளும் இந்நிகழ்வில் பங்குபற்றின. இ.தொ.காவின் புத்திரசிகாமணி எம்.பி., மலையக மக்கள் முன்னணியின் பிரதியமைச்சர் பெ.இராதாகிருஷ்ணன் மற்றும் பிரதியமைச்சர் வடிவேல் சுரேஷ் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பிரதான எதிர்க்கட்சிகளான ஐ.தே.க., ஜே.வி.பி., தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவற்றின் பிரமுகர்கள் இந்நிகழ்வில் பங்குபற்றவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடும் சோதனைக்குட்படுத்தினர். வடக்கு, கிழக்கு முகவரி அடையாள அட்டை களை வைத்திருந்தோர் நீண்டநேரம் தடுத்துவைக்கப்பட்டு கடுமையான விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப் பட்டனர்.

'கிழக்கு உதயம்' நிகழ்வை ஒட்டி தலைநகரில் பல வீதிகள் நேற்றுக் காலை மூடப்பட்டன. இதனால் சில பிரதான வீதிகள் போக்குவரத்து நெரிசலில் சிக்கின. (சி)


நேர்வின் வெற்றிக்கான
மாபெரும் எதிர்பார்ப்புக்
கருத்தரங்கு
தமிழ்
குழந்தை
ஆரம்பம் 23, 24, 25
காலை 8.30 மணி
விக்னா
கல்வி நிறுவனம்
தலைமையகம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.


## புளியங்குளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணியளவில் படையினர் மேற்கொண்ட இந்த ஷெல் மற்றும் பல்குழல் ஏவுகணைத் தாக்குதல்களால் இப்பகுதியில் உள்ள பயணிகள் சோதனைச் சாவடியும் சேதமடைந்திருப்பதாகக் கூறப்பட்டது.

பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்தாமல் இருப்பதற்காக சோதனை நிலையங்கள் மற்றும் இப்பகுதியில் இரு தரப்புகளுக்கும் இடைப்பட்ட சூனியப் பகுதிகள் மீது தாக்குதல் மேற்கொள்ளக் கூடாது என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் கூறிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, இந்தத் தாக்குதல் தொடர்பாக அரச படைத்தரப்பு எதுவிதத் தகவல்களும் வெளியிடவில்லை. (சி)


தேவை
அனுபவம் உள்ள லேடன் மரல் மெக்கானிக் உடன் தேவை.
தொடர்பு: சிவலிங்கம் மோட்டோர்ஸ்,
77, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(62798)


# மரண அறிவித்தல்

## கதிரவேலு தணிகாசலம் (ஜே.பி.)

(கலாபூசணம், சைவப்புலவர், ஞானபண்டிதர், ஆய்வரசு, பண்ணிசை மணி, ஓதுவாய் மூர்த்தி, சைவத் திருத்தொண்டர் சபைத் தலைவர், அறநெறிப்பாடசாலை அதிபர், வல்லைவாழி சித்திவிநாயகர் ஆலய திருப்பணிச் சபை உப தலைவர், சிவனடி ச.ச. நிலைய நிர்வாக சபை உறுப்பினர்)

சந்தை வீதி, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு தணிகாசலம் நேற்று (19.07.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - இளையாச்சி தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற கௌசலா தேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பரராசசிங்கம், நவரட்ணம், ஞானசேகரம், சிவயோகம், புஸ்பராகம் மற்றும் ராசலட்சுமி, ஆனந்தராசா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2007) வெள்ளிக்கிழமை சந்தைவீதி, உடுப்பிட்டியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பி.ப. 2 மணிக்கு வல்வை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சந்தைவீதி, உடுப்பிட்டி — நா. ஆனந்தராசா (மைத்துனர்)

# மன்னாரில் மூவர் கைது

கொழும்பு, ஜூலை 20

மன்னார், முருங்கன் வீதியிலுள்ள பொலிஸாரின் சோதனைச் சாவடியில் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் வாகனம் ஒன்றில் பயணித்த மூவர் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரினால் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள்.

ஒருவருக்கொருவர், முன்னுக்குப்பின் முரணான தகவல்களை பொலிஸாருக்குக்கூறியமையால் சந்தேகம் கொண்டு இவர்களைத் தாங்கள் கைது செய்தனர் எனப் பொலிஸார் கூறினர். இவர்களில் இருவர் தலைமன்னார் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும், மற்றையவர் நீர்கொழும்பைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மூவரும் தொடர்ந்து தடுத்து வைக்கப் பட்டு, விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர். (சி)

## பதுங்கு குழிகள் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆயிரம் ரூபாவும் அதனைக் கட்டி முடிக்க 75 ஆயிரம் ரூபாவரையும் நிதி உதவி வழங்கப்படும் என்று அமைச்சு அறிவித்துள்ளது.

அண்மைக் காலமாக விடுதலைப் புலிகள் எல்லைக் கிராமங்களை நோக்கி மோட்டார் தாக்குதலை நடத்தி வருகின்றனர். அதனை அடுத்தே எல்லைக் கிராம மக்கள் பதுங்கு குழிகளை அமைப்பதற்கு நிதி உதவி வழங்க அரசு முடிவுசெய்துள் ளது.

நிதி உதவி அளிக்க முடிவுசெய்துள்ள தேசத்தை கட்டியெழுப்பும் அமைச்சுக்குப் பொறுப்பான அமைச்சர், ஜனாதிபதியின் சகோதரர் பசில் ராஜபக்ஷ ஆவார். (அ-1)

## ஐ.தே.க....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேபோன்று, புரையோடிப்போய் உள்ள இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும் என்பதிலும் இவர்களுக்கு அக்கறை இல்லை.

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கும் தொடர்புகள் இருப்பதாக அரசு குற்றம் சுமத்துகின்றது.

ஆனால், மஹிந்த ராஜபக்ஷவின் அரசிற்கும் புலிகளுக்குத்தான் இரகசிய ஒப்பந்தம் இருக்கின்றது. அந்த இரகசிய உடன்படிக்கையின் பேரிலேயே கோடி கோடியாக புலிகளுக்கு அள்ளிவழங்கினர். அரசின் இரகசியத் திட்டம் இப்பொழுது அம்பலத்திற்குவந்துவிட்டது. இதுதான் உண்மை.

நாட்டில் ஏற்பட்டிருக்கும் இனப்பிரச்சினையை ஒருபோதும் இராணுவ நடவடிக்கைகளின் மூலம் தீர்த்து விட முடியாது. அரசின் பகல் கனவும் பலிக்காது.

**மங்கள உரை**

ஸ்ரீல.சு.கட்சி மக்கள் அணியின் சார்பில் மங்கள சமரவீர உரையாற்றினார். அவர் கூறியதாவது:-

ராஜபக்ஷ சகோதரக் கம்பனியின் சர்வாதிகாரப் பிடியில் சிக்கி சீரழிந்து போய் உள்ள நாட்டை மீண்டும் கட்டி எழுப்புவதற்கு ஜனநாயகத்தில் நம்பிக்கை கொண்ட அனைவரும் ஒன்றிணைய வேண்டும். கட்சியின் பெயரால் வாக்குகளைப் பெற்று இந்தச் சபைக்கு வந்தவர்கள் நாட்டு மக்களின் சாபத்திற்கு ஆளாகக் கூடாது.

இன்று நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருக்கும் ஸ்ரீல.சு.கட்சி உறுப்பினர்கள் நாட்டின் நலன்கருதியாவது எம்முடன் இணைய வேண்டும். அப்போதுதான் நாம் ஜனநாயகத்தைப் பாதுகாக்க முடியும்.

இந்த உயர்ந்த நோக்கத்துடனும், நம்பிக்கையுடனும் நாம் ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து செயற்பட தீர்மானித்துள்ளோம் - எனவும்கூறினார் மங்கள சமரவீர. (சி)


தவறிவிட்டது
மட்டுவிலுக்கும், கைதடிக்கும் இடையில் சின்னத்தம்பி அருட்சோதி மற்றும் அருட்சோதி ஜெகதீஸ்வரி ஆகியோரின் தேசிய அடையாள அட்டைகள் தவறிவிட்டன. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் 79, இராஜேஸ்வரி வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (62799)



கன்னாகம் றோட்டரக்ட் கழகம் நடத்தும்
இலவச க.பொ.த.(உ/த) கருத்தரங்கு 2007
கலை / வர்த்தகம்
இடம்: யா/இராமநாதன் கல்லூரி மண்டபம் மருதனார்மடம்
காலம்: 22.07.2007 ஞாயிற்றுக் கிழமை
நேரம்: 9 மணி
வர்த்தகப்பிரிவு
பொருளியல் — P. மோகன்
கணக்கீடு — முகுந்தன்
வணிகக்கல்வி — V. முரளி
கலைப்பிரிவு
அளவையியல் — S.S.மனோகரன்
இந்து நாகரிகம் — P.சுரேஸ்
தமிழ் — அமரசிங்கம்
புவியியல் — பாபு
நாடக அரங்கியல் — [illegible]


## அதி நவீன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

**முப்படைகளும் கொண்ட அமைப்பு**

சொந்த இராணுவம், கடற்படை மற்றும் வான்படை வைத்திருக்கக் கூடிய ஒரே போராட்ட அமைப்பாகவும் விடுதலைப் புலிகள் அமைப்பு உள்ளது. விடுதலைப் புலிகளின் ஐயண்ணா குழு மற்றும் கேபி குழுவினர் தான் ஆயுதக் கொள்வனவிற்கான குழுக்களாக இயங்குகின்றன.

ஐயண்ணா குழுவினர் உளவு அமைப்பாகவும் அமைப்பின் நிதி வருவாய் திரட்டல்களை கண்காணிக்கின்ற அமைப்பாகவும் இயங்குகிறது. கேபி குழுவினர் விடுதலைப் புலிகளின் ஆயுதக் கொள்வனவில் ஈடுபட்டுள்ளனர்.

மேலதிகமாக அறக்கட்டளைகள் மற்றும் பணியாளர்களை நியமித்து தமிழர்களிடமிருந்து நிதி சேகரிக்கின்றனர். ஆயுதக் கொள்வனவு அல்லது முதலீட்டுக்கான நிதியை அறக்கட்டளையூடாக செலவிடும் போது வரி தவிர்ப்பு மற்றும் சட்டபூர்வ அங்கீகாரத்தையும் பெறுகின்றனர்.

**தமிழ் நாட்டுக்கும் பிரதான இடம்**

தென் இந்தியாவின் மாநிலமாகிய தமிழ் நாடு, தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதக் கொள்வனவில் பிரதான இடம் வகிக்கின்றது.

கம்போடியாவும் புலிகளின் ஆயுதக் கொள்வனவில் குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கிறது. தெற்காசியா, வட கொரியா, ஆப்கான், லெபனான், சைப்ரஸ், கிரீஸ், துருக்கி மற்றும் உக்ரெயினிலிருந்தும் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கொள்வனவு செய்திருக்கின்றனர்.

சிறிலங்கா வான்படையை அழிப்பதற்கான வானூர்தி எதிர்ப்புத் தளபாடக் கொள்வனவு செய்வதுதான் விடுதலைப் புலிகளின் தற்போதைய அனைத்துலக நிதி சேகரிப்புப் பரப்புரையில் முதன்மை இடம் வகிக்கிறது என்ற விவரங்களை "ஜேம்ஸ் வீக்லி" வெளியிட்டுள்ளது. (அ-1)

## யுத்த நிறுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த அணிவகுப்பில் இராணுவத்தின் டாங்கிகள் மற்றும் தாழப்பறந்தவாறு விமானப்படையின் ஹெலிகள், கிபிர் உட்பட யுத்த வான்கலங்கள் என்பனவும் பங்கு கொண்டன.

அங்கிருந்த மேடையில் நின்றவாறு நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி உரைநிகழ்த்தினார். அந்த உரையில் -

"பயங்கரவாதத்திற்கு சட்டரீதியான அதிகாரப் பிரதேசம் ஒன்று இருக்கின்றது என்பதை உடன்படிக்கை ஒன்றின் மூலம் ஏற்றுக்கொண்டது போன்ற அநியாயமான செயல் ஒன்று இலங்கையிலன்றி உலகில் வேறெங்குமே நடக்கவில்லை" என்று அவர் அறிவித்தார். அதன் மூலம் விடுதலைப் புலிகளோடு ரணிலின் அரசு செய்துகொண்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையை அநியாயமான செயலென அவர் வர்ணித்தார்.

புலிகளுக்கு அதிகாரப் பிரதேசம் ஒன்று உண்டு என்ற மாயை, தொப்பிகல நடவடிக்கை மூலம் தமது படையினரால் தகர்க்கப்பட்டிருக்கின்றது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

(ஜனாதிபதி அங்கு ஆற்றிய உரையின் முழு விவரம் 2 ஆம் பக்கத்தில்)

## பாடசாலைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிக்காட்டப்பட்டதுடன் யுனிசெவ்வின் புள்ளிவிவரம் திருத்தப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. இதனை யுனிசெவ் ஏற்றுக்கொண்டது.

கிழக்குப் பிரதேசத்தைப் பொறுத்த வரையில் விடுதலைப் புலிகளுடன் சிறார்கள் இணைந்திருந்தால் அவர்களை விடுவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று சிறார் பாதுகாப்புச் சபையினர் உறுதியளித்துள்ளனர். (அ-1)


ஆறாம் ஆண்டு நினைவுகள்
மண்ணில் 07 . 09 . 1940

விண்ணில் 26 . 07 . 2001
அமரர் வைரமுத்து வரப்பிரசிங்கம்
(ஓய்வு பெற்ற அஞ்சல் ஊழியர், தெல்லிப்பழை)
திதி: ஆடி பூர்வபக்க ஷஷ்டி
நாள்கள் பல நகர்ந்து மாதங்கள் வருடங்களாகி ஆறு ஆண்டுகள் ஓடி ஒளிந்து விட்டது அப்பா. பூவுலகு வினை கொடுக்க பொன்னுலகை அடைந்து மேலுலகில் மேன்மை பெற்று மேலான பதமடைந்தீர்களே அப்பா. உங்கள் பாசத்தின் உயிர் உள்ளவரை உங்களின் நாமம் தொனித்து ஒலிக்கும். அப்பாவின் அன்பு மொழிகள் எப்போது எம் செவிகளில் கேட்கும். காத்திருப்போம். எல்லாம் வல்ல விரகத்தி விநாயகர் அருள் புரிவார்.
நி.மு.: கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.
த.மு.: களையோடை கண்ணகை அம்மன் கோயிலடி, நவாலி தெற்கு, மானிப்பாய்.
என்றும் உங்கள் நினைவுகளுடன்:
மனைவி, மக்கள், மருமகன், பேர்த்தி.
(62800)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.07.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org